பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3 | ஞாயிறு 17-3-40 பிரமாதிஞு பங்குனிமீ 4உ | முத்து 19

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
சமரஸம் வாழ்க!	...	510
உலக வர்த்தமானம்	...	511
இது தெரியுமா?	...	512
யுத்தகாலத் தொழில் அபிவிருத்தி	...	513
அதிகப் பிரஸங்கம்	...	515
விடுமுறை நாட்பிரயாணம்	ஜவஹர்லால் நேரு	517
கிராம சேவை	ராவ்சாகேப் கே. ஸுப்ரமண்யம்	520
மாதிரி	ஆர். பங்கஜம்	523
மளிகைக்கடை மாணிக்கஞ் செட்டி	ஜி. பாலசுப்ரமண்யம்	526
சிறுவர் பகுதி	அம்புலு	530
திரை உலகம்	...	532

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

சமரசம் வாழ்க!

ரஷ்ய-பின்னிஷ் யுத்தம் முடிவடைந்தது. தேசத்துக்காகப் போர்புரியும் மனப்பான்மையிலும் ஆர்வத்திலும் பின்னிஷ் மக்களுக்கு எவரும் ஈடாகமாட்டார்கள் என்பது, அச்சிறு தேசம் சென்ற மூன்று மாதங்களாக உயிரைக் கொடுத்து தேசத்தைக் காப்பாற்றினார்கள் என்பதிலிருந்து விளங்குகிறது. 35 லக்ஷம் ஜனத் தொகையுள்ள ஒரு சிறு தேசம் 17 கோடி ஜனத் தொகையுள்ள ரஷ்யாவுடன் எவ்வளவு நாட்கள்தான் யுத்தம்செய்ய முடியும்?

பின்னிஷ் மக்களின் தியாகத்தன்மை மற்ற சிறு தேசங்களுக்கும் விளக்கொளி போல் பிரகாசிக்கின்றது. பின்னிஷ் மக்கள் ரஷ்யப் போரில் தோல்வியடைந்தாலும் வீர சுவர்க்கம் அடைவது திண்ணம் என்றுதான் எண்ணி யுத்தம் செய்திருப்பார்கள்.

சக்தியற்ற ஒரு சிறு தேசத்தின்மேல் பெரும் பலங்கொண்ட ரஷ்யா ஆக்கிரமித்தது ஓர் கொடிய அநியாயமான காரியம். எல்லா தேசங்களும் கண்டித்தன. இந்தியத் தலைவர்களும், தங்களுக்கு பின்னிஷ் மக்களின்பேரிலுள்ள இரக்கத்தைத் தெரிவித்தார்கள். எல்லோரும் எப்பொழுது இத்தேசம் யுத்தத்திலிருந்து விடுதலை பெறும், என்று ஏங்கி இருந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்காரும் கொஞ்சம் கொஞ்சமாக பின்னிஷ் சர்க்காருக்கு பெரிய பெரிய உபகாரங்கள் செய்வதாக முன் வந்தார்கள். இப்படி பின்லாந்துக்கு உலகம் முழுவதும் இரக்கத்தைக் காண்பித்து, அச்சிறு தேசத்துக்கு உதவியளிக்கத் தயாராயிருந்ததுதான் ரஷ்யா சமரஸத்துக்கு ஒப்புக்கொண்டதற்குக் காரணமாக இருக்கலாம். இனி யுத்தத்தைக் கண்ணை மூடிக்கொண்டு நடத்தினால் பின்லாந்து பக்கம் வலுக்கும் என்று ஸ்டாலின் பயந்துதான் போயிருக்கவேண்டும். அதனால்தான் ஏதோ சாகசச்யங்கள் செய்து பின்லாந்துடன் சமாதானம் செய்துகொண்டார்.

சமரஸ ஒப்பந்தம் பின்லாந்தின் பலத்தை வேண்டியவளவு குறைத்துவிட்டது. வியபுரிக்கருகாமையிலுள்ள பிரதேசம் லடோகா ஏரிப் பிரதேசமும் ரஷ்யாவுக்கு தானம் செய்துவிடவேண்டுமாம். பாவம் இதற்கு முதலிலேயே இணங்காமல்தான் யுத்தத்துக்கு தயாராயிற்று பின்லாந்து. ஆனால் எவ்வளவு நாள்தான் எதிர்க்க முடியும்? அப்படி எதிர்த்துப் போர்புரிந்தாலும் தகுந்த சமயத்தில் வல்லரசுகளிடமிருந்து உதவி வரவேண்டும். போலந்துக்கு வந்தாப் போல் வந்தால் போதாது. இதை எல்லாம் யோசித்துதான் சில பிரதேசங்களை தத்தம் செய்வதையும் பொருட்படுத்தாமல் சமரஸத்துக்கு இணங்கி ஒப்புக்கொண்டது.

எப்படியோ, சமரஸச் செய்தி “இன்பத் தேன்” வந்து காதினில் பாய்வது போலிருக்கிறது, நமக்கு. அஜாதசத்ரு, பின்லாந்து, யுத்தத்திலிருந்து விடுதலையடைந்தது, நமக்கு மிகுந்த திருப்தியளிக்கிறது. இந்த சமரசம், நடந்துவரும் பெரும் யுத்தத்தையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திப்போம். சமரஸம் நீடூழி வாழ்க!

உலக வர்த்தமானம்

சென்ற வாரத்திய சர்வதேச நிலைமையில் முக்கியமாக மூன்று போக்குகள் காணப்படுகின்றன. வெகு நாளாக மேற்குமுனை தூங்கிவருவது யாவரும் அறிந்ததே—உலக யுத்தம்தான் பின்னிஷ் முனையில் நடக்கிறதே! அதுவும் இப்பொழுது சமரசத்தில் முடிந்துள்ளது. உலகப்போக்கு திடீரென மாறினால், ரஷ்யாவின் தற்காப்பிற்கவசியமான அளவுக்கே பின்லந்து விட்டுக்கொடுத்துள்ளது. இம்முடிவில் யாருக்குத் திருப்தியிராது?

ரிப்பண்டிராப் இத்தாலிக்கு விஜயம் செய்து முஸ்ஸோலினியுடன் பேசி வருவது மற்றொரு முக்கிய விஷயம். பின்லந்து விஷயத்தில் ரஷ்யாவுக்கெதிராக ஒன்றும் இத்தாலி செய்யாமலிருக்க வேண்டுமென்று கோரப்பட்டதாம். அதோடு கடல் வழியாய் போகமுடியாத நிலக்கரியை ரயில் வழியே ஜெர்மனியிலிருந்து இத்தாலி பெறுமென்றும் முடிவாகியுள்ளது.

நம் நாட்டு நிலைமையிலும் இவ்வாரத்தில் முக்கிய சம்பவங்கள் பலவுண்டு. காங்கிரஸின் பாட்னா தீர்மானத்தை விளக்கி ஸ்ரீ புலபாய் பேசியுள்ளார். சட்ட மறுப்பியக்கம், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஒருங்கே தீங்கிழைப்பதாகுமென்றும், வேறு சமரச வழியின்றிப் போனால்தவிர அதைக் கையாளுவதில் காங்கிரசுக்கு விருப்பமில்லை யென்றும் விளக்கியுள்ளார். ஸ்ரீ அஸாத் லண்டன் பத்திரிகைக்கனுப்பிய செய்தியில், காங்கிரஸ் பிரிட்டனுக்கு உதவியளிக்கத் தயாராயிருக்கும்கால் பிரிட்டன் சமரச வழியை அடைத்து விடுவது சரியல்லவென்று கூறுகிறார்.

காங்கிரஸ் தீர்மானங்களை விளக்கிப் பேசிய காங்கிரஸ் சோஷலிஸ்ட் ஸ்ரீ நாராயன், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அரெஸ்ட் செய்யப்பட்டுள்ளார். இதைக் கண்டித்து ஸ்ரீ நேரு, ராஜன் பாபு, பிரபல தினசரிகள் எல்லாரும் எழுதியுள்ளனர்.

மத்திய அசெம்பிளியில் ஸ்ரீ ஆனே கொண்டுவந்த (பிரிட்டனின் யுத்த நோக்கமும் இந்தியாவும் என்ற) தீர்மானம் விவாதத்திற்குப் பிறகு தள்ளப்பட்டது. காங்கிரஸ் அங்கத்தினர் அங்கில்லாதது வருந்தத்தக்கதென 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' எழுதுகிறது. மேல் சபையில், இந்தியப் பாதுகாப்பை இந்திய மயமாக்குவதைப்பற்றி ஸ்ரீ குன்ஸ்ரு கொணர்ந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

போனவாரம் சமஸ்தானாதிபதிகளும், மந்திரிகளும் கூடி அரசியல் நிலையை அலசிப் பேசிப் பல தீர்மானங்களை நிறைவேற்றினர். இந்திய அரசியல் சட்டத்தை மாற்றுமுன், சமஸ்தானாதிபதிகளுக்குப் பல விசேஷ சலுகைகள் விட்டுக் கொடுக்கவேண்டுமாம். சுதேச மன்னர்கள் நோக்கம் இந்திய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவதல்லவாம். பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஒப்பந்த மேற்படுவது மூன்று பார்ட்டிகளைப் பொறுத்ததாம்—பிரிட்டன், சுதேச மன்னர், பிரிட்டிஷ் இந்தியா.

பம்பாயில் பொது வேலை நிறுத்தம் மும்முரமாய்ப் போன பத்து நாட்களாக நடந்து வருகிறது. தொழிலாளர் தலைவர் மூவர் சிறைப்படுத்தப் பட்டுள்ளனர். யுத்தகால அமித லாபத்தில் தொழிலாளரும் பங்கு பெறுவது நியாயமேயென்று பம்பாய் சர்க்கார் மில் முதலாளிகளுக்கு அறிவித்துள்ளனர். முதலாளிகள் இதை ஆலோசித்தார்களாம்; முடிவு தெரியவில்லை. இதற்குள் இவ்வேலை நிறுத்தத்தை ஆதரித்து ஒரு நாள் பொதுஜன வேலை நிறுத்தம் வேண்டுமென்று தொழிற் சங்க நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர். வேலை நிறுத்தக்காரர்களுக்குதவிபுரிய ஸ்ரீ ஜோஷி தலைமையில் பொதுஜனக் கமிட்டி வேலை செய்து வருகிறது.

இது தெரியுமா?

போலி நாணயங்கள்

இந்தியாவின் வியாபாரத்தில் பம்பாய் தான் அதிகமாக பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. அதுபோலவே போலி நாணயங்கள் உற்பத்தியிலும் பம்பாய் அதிக சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிருப் போலிருக்கிறது! 1937-38, 1938-39, இவ்விரண்டு வருஷங்களிலும் வருஷத்துக்கு ரூபாய் 40,000 வீதம் பொய்க் காசுகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றனவாம். இந்த தொகை மற்ற மாகாணங்களில் உற்பத்தி செய்யப்படுவதைக் காட்டிலும் மிகவும் அதிகம். அதற்கு அடுத்தபடியாக சென்னை மாகாணம் 1937-38ல் ரூ. 30,583-ம் 1938-39ல் ரூ. 33,447, உற்பத்தி செய்கிறதாம். மூன்ருவதாக வங்காளம் வருகின்றது.

* * *

ஸ்ரீ காஞ்சீ காமகோடி மடம்

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்தின், சிஷ்யர்களுக்கு ஸ்ரீ மடத்தின் காரியங்களில் சிரத்தை அதிகரிக்கவும், ஸம்பந்தம் வலுப்படவும், சிஷ்யர்கள் வசிக்கும் ஒவ்வொரு இடங்களிலும் ஸ்ரீமடத்தின் பிரதிநிதியாக முத்ராதிகாரிகளை நியமிக்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சந்திர மௌளீச்வர ஸ்வாமியின் பூஜைகள், பிராம்மண ஸந்தர்ப்பணம், தர்மப் பிரசாரம், ஆகியவை நன்கு நடைபெறும் பொருட்டு சிஷ்யர்கள் சுப காலங்களில் ஸ்ரீமடத்திற்கு ஸம்பாவனைகள் செய்ய வேண்டிய விஷயமும், வருஷ வாரி ஸம்பாவனைகள் சேர்ப்பிக்க வேண்டிய விஷயமும் முத்ராதிகாரிகள் மூலம் கவனிக்கப்படும். இதுவரையில் தஞ்சை ஜில்லா கிராமங்களில் தகுந்த அந்தஸ்துள்ள சுமார் 100 பேர்கள் வரையில் ஸ்ரீ ஸ்வாமிகளால் முத்ராதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டிருக்கிருர்கள். முத்ராதிகாரிகளுக்கு பட்டுப் பட்டயமும், பிரம்பு தண்டமும் ஸ்ரீமடத்தின் சின்னமாக அளிக்கப்பட்டது. இன்னும் பலவிடங்களிலும் கூடிய சீக்கிரத்தில் முத்ராதிகாரிகள் நியமிக்கப் படுவார்கள். முத்ராதிகாரிகள் செய்ய வேண்டிய சிலமுக்கிய கார்யங்களையும் ஸ்ரீ ஸ்வாமிகள், உபதேசம் செய்தார்கள். உபநயனம் ஆனபிறகு மாணவர்களை ஒரு வருஷம் வரையில் ஆங்கிலப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் வேதம் கற்றுக் கொடுத்தல், விவாஹத்தில் மற்ற ஆடம்பரங்களை ஒருநாளில் முடித்து விட்டு 3 நாள் ஔபாஸனம் மட்டும் செய்தல், சுபா சுபகாலங்களில், வேதாத்யயனம் செய்துள்ள பிராமணர்களுக்கென்று தனியாக வருமானம் ஏற்படுத்திக் கொடுத்தல், கிராமங்களில் மதமாற்றம் நடவாமல் எல்லா ஹிந்து ஜாதியாரையும் காப்பாற்றல், பசுக்களை விற்பனை செய்யும்போது ஆஹார நிமித்தத்திற்காக இல்லையா வென்பதைக் கவனித்தல், பிரதி ஏகாதசிகளிலும் புராணச்ரவணம் செய்வதுடன் அங்காங்குள்ள தேவாலயமடாதிகளில் புல் பூண்டு எடுத்து பரிஷ்கரித்தல். முதலியவை முத்ராதிகாரிகள் கவனிக்கவேண்டிய விஷயங்கள் மேற்கண்ட தர்மங்களை கவனிக்கும்படி பொதுஜனங்களுக்குப் போதிப்பதும் முத்ராதிகாரிகளின் முக்ய கார்யமாயிருக்கும்.

அதிகப் பிரஸங்கம்

"தைர்யமிருந்தால்"

"தைர்யமிருந்தால் கட்டை வெட்டு" என்று எழுதியிருந்தது; வெட்டிக் கொலை யாசெய்வது? அதுவும் "பூனை நரம்பு களை"யா என்று எண்ணி, காகிதக்கட்டை வெட்டாமல் மெதுவாக வெளியே எடுத்து "பூனை நரம்புகள்" (Cat Guts) என்னும் புத்தகத்தைப் பிரித்துப் படித் தேன்.

பிடிலுக்கு ஒரு சின்னத்தம்பி உண்டு. அதற்கு கிட், (பூனைக்குட்டி) என்று ஆங் கிலத்தில் பெயர். அதன் தந்திகளை கிட் கட்ஸ் (பூனைக்குட்டி நரம்புகள்) என்று சொல்லுவார்கள். பூனைக் குட்டி பூனையானல், பூனைக்குட்டி நரம்பு கள் பூனை நரம்புகளாக மாறுவது ஸஹஜந் தானே. ஆனல் உண்மையில் பிடில் தந்தி கள் பூனை நரம்புகள் அல்ல. ஆடு மாடு போன்ற மிருகத்தின் நரம்புகளே. அப் பொழுது பிடில் தந்திகளுக்கு "பூனை நரம்புகள்" என்ற பெயர் ஏனென்று இன்னமுமா விளங்கவில்லை? வாசிக்கத் தெரியாதவர்கள் பிடிலை வாசித்தால் உண் டாகும் சப்தம் என்ன? "ஞாவ், ஞாவ், குர், குர்" தான். இதுவே இப்பெயருக் கும் காரணம். இது போலவே "இப் புத்தகத்தைப் படித்துச் சரியாக அர்த்தம் செய்துகொள்ளச் சக்தி இல்லாதவர்கள், 'ஞாவ், ஞாவ்' என்று அழுதுகொண் டோ, அல்லது 'குர், குர்' என்று கோபித்துக்கொண்டோ இருக்கட்டும்; அதனல் எனக்கு ஒரு கவலையும் இல்லை" என்பதைத் தெரிவிக்கவே கவி "பூனை நரம்புகள்" என்று தன் புத்தகத்திற்குப் பெயரிட்டிருக்கிறார் போலிருக்கிறது. அல் லது "என்போல் எழுத மற்றவர்களுக் கும் தைரியமிருந்தால்........" என்று அர்த்தமாகும்.

இந்தப் பூனை நரம்புகளை வாசித்தவர்— மன்னிக்கவேண்டும்; எழுதியவர் மஞ்சேரி ஈச்வரன்தான்—வேறொருவருமில்லை. இதற்குமுன் அவர் எழுதிய காவ்யங்களை புகழாத விமர்சகர்கள்மீது சினமுற்றார். ஆனல் வெறுப்புடன் பேசாமல் இருந்து விடவில்லை. "நீங்கள் என்னை மதிக்கா விட்டால் என்ன நானே மதித்துக் கொண்டு உங்களை அலக்ஷ்யம் செய்கி றேன்" என்ற அஹங்காரத்துடன் இப் புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார். இல்லாவிட்டால் மற்றவர்களைக் குறிக்கும் பொழுது 'indo anglians' என்று சிறிய 'i' யுடனும், தன்னைக் குறித்துக்கொள் ளும் பொழுது "Indo anglian" என்று பெரிய 'I' யுடனும் அச்சிடுவாரா?

"Indo anglian" என்றால் ஆங்கிலோ இந்தியர், இந்தியக்ருஸ்துவர்கள்போல் ஒரு வகுப்பு என்று எண்ணவேண்டாம். ஆங்கிலத்தில் பாண்டித்யம் பெற்றவர் என்று இதற்கு அர்த்தம். இதனல் இப் புத்தகம் ஆங்கிலத்தில்தான் எழுதப்பட் டிருக்கிறது என்பது உங்களுக்கு உள் ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்து விட்டதல்லவா?

இந்தப் புத்தகத்தின் விலை ஒரு ஷில் லிங். ரூபாய், அணாவில், விலை என்ன வென்று வெளியிடவில்லை; சுமார் 11 அணா முதல் ரூ. $1\frac{1}{2}$க்குள்ளாக இருக்கும். இவ் விதம் பிரசுரமான இப்புத்தகத்தை பரதே சிச்சாமான் என்று எண்ணவேண்டாம். அஸல் சுதேசிச் சரக்கு என்பதை எடுத் துக்காட்ட, "இந்தியாவில் அச்சிடப்பட் டது" என்று கவி எழுதிவிட்டார்.

இப்புத்தகத்திலுள்ளது "வசனமா, செய்யுளா" என்று என்னைக் கேட்க வேண்டாம். கவியையும் கேட்கவேண் டாம். "யார் யார் என்னை எவ்வெவ் விதம் நினைக்கிறார்களோ அவ்விதமே அவர்களுக்குக் காக்ஷியளிப்பேன்" என் பதை அறிவிக்கக் கவி "Proem"— வசனுள், என்று வசனம் செய்யுள் இரண்

டையும் சேர்த்துத் தன் முதல் காவ்யத்திற்குத் தலைப்பாக்க் கொடுத்திருக்கிறார்.

இப்பூனை நரம்புக்கவி, பழைய மடிஸஞ்சிகளில் ஒருவர் அல்ல. தற்காலத்திய "Hold all" வகுப்பைச் சேர்ந்தவர். சிறிதும் அச்சமின்றி உண்மைகளைத் திடுக்கிடச்செய்யும் விதமாக எடுத்துரைத்திருக்கிறார். உதாரணமாகத் தன் தமையனை வர்ணித்திருப்பதைக் கேளுங்கள். "உதடுகள் வடிவமெடுத்தால் பானையை ஒக்கும். அதுவும் தங்கத்தினாலாகியது" என்கிறார் நம் கவி. சளசளவென்று பேசினாலும் கேட்கும் பொழுதெல்லாம் நம் கவிக்குத் தாராளமாய்ப் பணத்தை அள்ளி வீசுவார் தமையனார் என்று உண்மையை உரைத்திருக்கிறார். இன்னொரு தமையனை "வெறும் தடியன்" என்று கூறுவதற்குப் பதிலாக "இரக்கம் தாங்கும் உத்திரம்" என்று கூறுகிறார். இவைகளிலிருந்து நம் கவி அரிச்சந்திர பரம்பரையைச் சேர்ந்தவர் என்று தெரிகிறதல்லவா.

இப்புத்தகம், வேதாந்திகளுக்கு வேதாந்தமாகவும், குஷிப் பேர்வழிகளுக்குக் குஷியாகவும், முட்டாள்களுக்கு முட்டாள்தனமாகவும், ஒன்றும் தெரியாதவர்களுக்கு ஒன்றும் புரியாமலும் இருக்கும். பண்டிதர்களுக்கும் பழைய மடி ஸஞ்சிகளுக்கும் கோபத்தையும், தற்காலத்தியவர்களுக்குக் குஷியையும் உண்டுபண்ணலாம். ஆனால் வேதாந்திகளும் என் போன்ற அதிகப் பிரஸங்கிகளுமே, இக் காவ்யத்தின் தத்வத்தை—கவிதன் கனவிலும் கருதாத தத்வத்தை—அறிவார்கள். "நவீன ஸூர்யஸ்தோமம், புதுமைப் பெண், மலைகளில் ஏறினேன், குட்டிச் சுவர்" முதலியவைகளின் தத்வம் மற்றவர்களுக்கு ஒருபோதும் அர்த்தமாகாது. என்போன்றவர்கள் சொல்லித்தான் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

அஹங்காரத்தின் சிகரத்தை காவ்ய முடிவில் கவி அடைகிறார். கவியின் கீர்த்தியைக் கண்டு "வானில் விளம்பரங்களை இசைக்கட்டுமா—சமாசாரப் புறாக்களை பறக்கவிடட்டுமா என்று ராய்டர் கேட்டார்" என்று தற்புகழ்ச்சி செய்துகொள்கிறார் கவி. இந்த அஹங்கார சிகரத்திலிருந்து தாவி காவ்ய ஸ்வர்கத்தை அடைய எத்தனிக்கிறார். ஆனால் ஸ்வர்கத்தை அடையாமல் அதன் காலைப் பிடித்துக் கொண்டு கால்கீழாகத் தொங்குகிறார் கவி. தவறி விழுந்தாலும் விழுந்துவிடலாம். இதைக்கண்டு இரக்கம்கொண்டு "பாரத மணி" ஆசிரியர் விச்வாமித்ர ரூபம்எடுத்து "டேய் அதிகப்பிரஸங்கி, ஒரு காவ்ய த்ரிசங்கு ஸ்வர்க்கம் ஏற்படுத்தி நம் கவியை அதில் நிலைநாட்டு" என்று உத்திரவிட்டால், வேண்டியமட்டும் அதிகப் பிரஸங்கம்செய்து அவர் கட்டளையை நிறைவேற்றுகிறேன். காவ்ய ஸ்வர்க்கமில்லாவிட்டாலும், காவ்ய த்ரிசங்கு ஸ்வர்கமாவது கிடைக்குமல்லவா. ஸம்மதிக்கக் கவிக்குத் தைர்யமிருந்தால்..........

அதிகப் பிரஸங்கி.

குறிப்பு: என்மேல் கோபங்கொண்டு, தன் அடுத்த புத்தகத்தில் கவி என்னைத் தாக்கி எழுத எண்ணங் கொண்டாரானால், என் பெயரை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் கஷ்டம் அவருக்குக் கொடுக்காமல் நானே அதை "Cross Brain" என்று மொழி பெயர்த்து அவருக்கு அளிக்கிறேன். Critic—Cross Brain என்ற இந்த இரண்டும் 'C' என்ற அக்ஷரத்தில் ஆரம்பிப்பது அவருக்கு நல்லதல்லவா? ஆனால் நான் "indo anglian" அல்ல. அஸல் "Indo Indian" என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"Cross Brain."

யுத்தகாலத் தொழில் அபிவிருத்தி

வருங்காலப் பொதுஜன சர்க்கார் கையாளவேண்டிய பொருளாதார திட்டத்திற்கு வழிகோலியாக, யுத்தகாலத் தொழிலபிவிருத்தி ஒரு திட்டத்திற்குட்பட்டதாய் அமையவேண்டும். ஆனால் சமீபத்தில் மத்தியசர்க்கார் வெளியிட்டுள்ள அமிதலாபவரி மசோதா இதற்குகந்ததாயில்லை. இதைப்போன்ற ஒரு அடிப்படையான பிரச்னையை குறுகிய, தற்காலிகமான நோக்கத்துடன்மட்டும் ஆராய்வது தவறு; வருங்காலத் தேச முன்னேற்றத்தையும், அதற்கான திட்டங்களையும் அவ்வப்போது மனதில் கொள்ளவேண்டும். வருஷாந்திர வரவு செலவு கணக்கைச் சரிக்கட்டும் நோக்கத்துடன் கையாளப்படும் இம்மசோதா பெருந்தொழில் வட்டாரங்களில் கலவரத்தை உண்டுபண்ணுவதாகும். தன் பொருளாதாரப் போக்கைத் தானே நிர்ணயித்துக்கொள்ளும் உரிமையைக் கோரும் ஒருதேசத்தில் இதைப்போன்ற சர்க்கார் போக்கு கவலைக்கிடமாயிருப்பது சகஜமே. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைவிட, பட்ஜட்டைச் சரிக்கட்டுவதையே முக்கியமாகக் கருதும் இம்மசோதாவானது நாம் கோரும் பொருளாதார திட்டத்திற்கு முரணானதாகும்.

திட்டமில்லாப் போக்கின் குறைகளை நிரூபிக்கும் இம்மசோதா ஒரு திட்டத்தின் அவசியத்தை எடுத்துக் காட்டுவதைக் காணலாம். சரியான முறையில் திருத்தப்பட்டோ அல்லது அப்படியே சட்டமானாலும், நாட்டில் சிறிதளவாவது தொழிலபிவிருத்தியடைவது மட்டும் திண்ணம்; யுத்தகாலத்தில் அதிகரித்த கிராக்கி ஏற்படுவது நிச்சயம். தொழிலபிவிருத்தியின் அளவை வேண்டுமானால் இம்மசோதா சிறிது பாதிக்கலாம்.

யுத்தகாலத்தில், தற்போதுள்ள உற்பத்திச் சாலைகள் பெருகுவது யாவரும் அறிந்த விஷயமே. போன மகாயுத்த காலத்தில் நடுநிலைமை நாடுகள் இதனால் நன்மையடைந்த விஷயம் தெரிந்ததே. யுத்தநாடுகளில் அன்றாட சாதாரணத் தொழில்கள் நின்று, யுத்தத்திற்கான வேலையே மும்முரமாக நடப்பதால் மற்ற நாடுகளின் வியாபாரம் விருத்தியடைகிறது. சாதாரண உலக வியாபாரப் போக்குவரத்து தடைப்படுவதாலும், உள் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி யேற்படுவதாலும், இந்தியாவும், நடுநிலைமை நாடுகளும் லாபமடைந்தன. இதைத்தவிர, யுத்த தளவாடங்களை உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்வதனால், நேர்முகமான பலனும் ஏற்படுகிறது; புதிய தொழில்கள் நிறுவப்படலாம். ஆனால், தற்போதுள்ள தொழிற்சாலைகள் அபிவிருத்தி படைவதையே இங்கு கவனிப்போம்.

இன்றுள்ள தொழிற் சாலைகள் யுத்த காலத்தில் பெருகுவதனால் ஏற்படும் பிரச்னைகள் சிலவுண்டு. யுத்தம் நின்றவுடன் ஏற்படும் 'தொழிற் சுருக்க'த்தை ஒரு திட்டப்படி நிர்ணயித்து, அதனால் வரும் தீங்கைக் குறைக்க வழிதேடவேண்டும். முதலில், யுத்தம் நின்றவுடன் யுத்தத்திற்கு நேர்முகமான முறையில் 'சப்ளை' செய்துவந்த தொழில்கள் பாதிக்கப்படும். இரண்டாவதாக, அதுவரை போர் செய்துவந்த நாடுகளிலிருந்து இறக்குமதி அதிகரிக்கும். மூன்றாவதாக உள்நாட்டில் பல தொழில்கள் கைவிடப்படுமாதலால், பண்டங்களின் கிராக்கி குறையும். கடைசியாக, யுத்தத்தை அடுத்துவரும் 'பொருளாதார மந்தம்' இருக்கிறது. இப்பொருளாதார மந்தம் ஒரு தனி நாட்டின் போக்கைப் பொருத்ததல்ல; உலக மார்க்கட்டைப் பொருத்த சம்பவமாகும். யுத்தகாலத்தில் தொழிலபிவிருத்தி யேற்படுவது உண்மையானாலும் அதையடுத்து வரும் நிலை விரும்பத்தக்கதாயிராது. இக்குறைகளைத் தீர்க்க ஒரே வழிதானுண்டு. யுத்த

காலத் தொழிலபிவிருத்தியை ஒரு திட்டப்படி வகைப்படுத்தவேண்டும்; குறிப்பிட்ட நோக்கங்களுக்குட்பட்டு, சரியான வழிகளில் செலுத்தவேண்டும்.

தற்போதுள்ள தொழில்களில் எவ்வளவு தூரம் எவ்வழிகளில் அபிவிருத்தியேற்படலாமென்பதைக் கவனிப்போம். சணல், இரும்பு இவ்விரு தொழில்களே முக்கியமாக யுத்தத்திற் குதவியாயுள்ளன. இதைத் தவிர சில சில்லரைத் தொழில்களும் உள்ளன. உரோம நெசவுத் தொழில் அபிவிருத்தி யடைந்துள்ளது. இதற்காக, இதுவரை பருத்தி நெசவில் ஈடுபட்டிருந்த பல கை நெசவுக்காரர்களை மத்திய சர்க்காரின் 'சப்ளை' இலாகா உபயோகப்படுத்தி வருவதாக அறிகிறோம். பாதரக்ஷைத் தொழிலும் இதே நிலையில் உள்ளது.

சணல் தொழில் நம் நாட்டின் ஏற்றுமதியில் ஐந்திலொரு பங்குக்குக் காரணமாகும். சாதாரண காலத்திலும் சரி, யுத்த காலத்திலும் சரி, இத்தொழில் நாட்டின் பொருளாதார அமைப்பில் ஒரு முக்கிய ஸ்தானம் பெற்றதாகும். இத்தொழிலில் இதுவரை (யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து) காணப்படும் அபிவிருத்தி, வேலை நேரம் உயர்த்தப்பட் டிருப்பதும், கையிலுள்ள முழு நெசவுச் சாதனங்கள் உபயோகிக்கப்படுவதுமாகும். ஒரு வாரத்தில் வேலை நேரம் 45 மணியிலிருந்து 60க்கு உயர்த்தப்பட்டுள்ளது. யுத்தத்திற்கு முன் வேலையின்றி யிருந்த மொத்தத்தில் 25 சத விகிதமான நெசவு யந்திரங்கள் இப்பொழுது முழு வேலை செய்கின்றன.

சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு இப்பொழுதுதான் இந்நிலை யேற்பட்டுள்ளது. இன்றைய யுத்தம் நின்ற பிறகு இத் தொழிலில் சுருக்கம் ஏற்படுவது சகஜமே. அச் சுருக்கத்தின் அளவு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியின் அளவா யிருக்குமென்று நம்பலாம். போன யுத்தத்திற்குப் பிறகு இத்தொழிலில் காணப்பட்ட கஷ்ட நஷ்டங்களை வருங் காலத்தில் தடுக்க வேண்டியது ஒரு நாகரீக சர்க்காரின் கடமையாகும்.

இரும்பு, உளித் தொழில், சென்ற பத்து வருஷங்களாகவே முன்னேறி வந்துள்ளது. டாடா கம்பெனியின் முன்னேற்றமும், சமீபத்தில் அமைக்கப்பட்ட 'பெங்கால் ஸ்டீல் கார்ப்பரேஷ'னும் இத்தொழிலபிவிருத்தியைக் காட்டுகின்றன. யுத்த ஆரம்பத்திற்கு முன்பே ஆயுத வளர்ச்சி அதிகமானதால், இவ்விரும்புத் தொழிலபிவிருத்தியும் வெகு நாளையதாகும். டாடா கம்பெனியார், தினமும் 1,100 டன் இரும்பு 'உருக்கும் சாலை' அமைக்க முடிவு செய்திருப்பதே, யுத்த கால அபிவிருத்தியின் அளவைக்காட்டும். இரும்புத் தொழிலே நாட்டின் தொழிலபிவிருத்திக்கு அடிப்படையாகும். அதனால் யுத்தம் நின்ற பிறகும் இத்தொழிலில் 'சுருக்கம்' ஏற்படாதெனலாம். நாட்டின் தொழிலபிவிருத்தி நீடிக்க வேண்டுமானால், யுத்தத்திற்குப் பிறகும், தேசத்தின் தேவைக்குக் குறைவாகவே யிருக்கும், இரும்புத் தொழில் வளர்ச்சி.

கடைசியாக, பருத்தித் தொழிலும் யுத்தத்தினால் அபிவிருத்தியடையும். நேர்முகமாக யுத்தத்திற்கு உதவி செய்யாவிடினும், இத்தொழில், இறக்குமதிக் குறைவினாலும், வெளிநாடுகளில் வியாபாரப் போட்டிக் குறைவினாலும், உள்நாட்டு மார்க்கெட் பெருகுவதாலும், பெருத்த லாபமும், வளர்ச்சியும் பெறும். ஆனால் அதே காரணங்களால், யுத்தம் முடிந்தவுடன் இத்தொழிலில் மந்தமேற்படுவதும் திண்ணம். நம் நாட்டையடுத்துள்ள பர்மா, ஸிலோன், ஆப்கனிஸ்தானம், கிழக்காப்பிரிக்கா இவைகளில் நம் வியாபாரத்தை நிலைநாட்டும் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதே இதற்கு மாற்று.

சிமின்ட் தொழில் யுத்தத்தினால் அபிவிருத்தியடைய அதிக இடமில்லை. அதேபோல் தான் சோப்புத் தொழிலும். ஆனால் இவை, யுத்த காலத்திலேற்படும் பொதுப் பொருளாதார அபி

(522-ம் பக்கம் பார்க்க)

விடுமுறை நாட் பிரயாணம்

[ஜவஹர்லால் நேரு]

ரயில் வண்டியில் தூரப்பிரயாணத்தை எல்லாரும் வேப்பங்காயாக எண்ணுகிறார்கள். முதல் வகுப்பு பெட்டிகளிலும், ஏர் கண்டிஷண்ட் பெட்டிகளிலும் செல்லுகிறவர்கள்கூட ரயில் பிரயாணத்தில் ஏகப்பட்ட கஷ்டங்கள் இருக்கின்றன என்று குறை கூறுகிறார்கள். இரண்டாவது வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்யவேண்டும் என்கிற எண்ணமே அவர்களுக்கு பயத்தை உண்டு பண்ணுகிறது. இண்டர்மீடியட் வகுப்பு பெட்டியோ அல்லது மூன்றாவது வகுப்பு பெட்டியோ அவர்களுக்கு நரகங்கள் போல் தென்படுகின்றன. அந்த பெட்டிகளில் தான் பாவம் ஏழைகள், காட்டு மிருண்டிகள் மட்டுமரியாதையில்லாமலும் உணர்ச்சியில்லாமலும் கத்திக்கொண்டிருப்பார்கள், என்பது அவர்கள் கருத்து. உண்மையில் இந்த தேசத்தின் ரயில் வண்டிகளில் ஏர் கண்டிஷண்ட் பெட்டிக்கும் மூன்றாவது வகுப்புப் பெட்டிக்கும் வித்தியாஸம் இருக்கத்தான் இருக்கின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத இரண்டு தனி உலகங்கள் போல் தான் இருக்கின்றன; இந்தியாவிலுள்ள ஜனங்களின் பல வகுப்புகளுக்கு மிடையிலுள்ள இடைவெளியை அவை நன்றாகக் காட்டுகின்றன. அதுமாத்திரம் அல்ல, ரயில் கம்பெனிகளுக்கு அதிகமாக செலவழிக்கும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் மிக்க சிறுமைப்படுகிறார்கள் என்பதும் உண்மையே.

இந்திய ரயில் வண்டிகளின் ஏர் கண்டிஷண்ட் பெட்டிகளில் நான் பிரயாணம் செய்ததே இல்லை. எனக்குக் கிடைக்காத பலவற்றுள் ஏர் கண்டிஷண்ட் பெட்டியும் ஒன்று. அந்தப் பெட்டிக்குள் கிடைக்கக்கூடிய வசதிகளையும், சுகங்களையும், நான் வெளியிலிருந்து முறைத்துத்தான் பார்க்கலாம்! முதல் வகுப்புப் பெட்டிகளில் நான் பிரயாணம் செய்தது வெகு காலத்துக்கு முன்பாகையால், அதை நான் மறந்துகூடவிட்டேன்.

இந்தியாவில் வெகு நாட்களாக நான் முதல் வகுப்பில் பிரயாணம் செய்வதே இல்லை. நான் எப்போதும் பிரயாணம் செய்வதாக இருந்தால் மூன்றாவது வகுப்பிலாவது அல்லது இண்டர்மீடியட் வகுப்பிலாவதுதான் செல்வேன். இரண்டாவது வகுப்பில் செல்வது ஏதோ சில தடவைகள்தான்.

லக்ஷ்மீகடாக்ஷம் பெற்ற என் நண்பர்களில் சிலர்நான் இப்படி கீழ் வகுப்புப் பெட்டிகளில் பல சொல்லமுடியாத கஷ்டங்களையும் அனுபவித்துக்கொண்டு நான் பிரயாணம் செய்வதைக்கண்டு வருத்தப் பட்டார்கள். ஆனால் அவர்கள் வீணில் தான் வருத்தப்படுகிறார்கள்; ஏனெனில், எனக்கு இதுபோன்ற பெட்டிகளில் நீண்ட பிரயாணம் செய்வதுதான் திருப்தியளிக்கின்றது. முரட்டுச் சரீரம் எனக்கு இல்லாவிட்டாலும் அதிக சிரமமில்லாமல் மூன்றாவது வகுப்பு—ஜன நெருக்கம் அதிகமாக இல்லாவிட்டால்— அசௌகரியங்களையும் எதிர்த்துப் பிரயாணம் செய்யக்கூடிய பலம் என்னிடத்தில் இருக்கிறது.

நான் அதில் நன்றாகத் தூங்குவேன்; களைப்பாறுவேன், படிப்பேன்; கொஞ்சகாலம் நான் தினசரி வாடிக்கை வேலைகளையும் ஜனங்களைக்கண்டு பேசுவதையும் மறந்திருப்பேன். எனக்கு அதிர்ஷ்டம்; தூங்கவேண்டும் என்று விரும்பினால் தூங்குவேன். தூக்கமின்மை என்கிற வியாதிக்கு நான் இரையாகவில்லை. தூக்கத்தை வேண்டி வெற்றிலைப்பாக்கு வைத்து வரவழைக்கிற வழக்கமே எனக்குக்கிடையாது. தூக்கத்தை நான் மிகவும் கேவலமாக எண்ணுவேன். அந்த

அசடு வந்து என்னைத் தூங்கப்பண்ணுகிறது. இதனால்தான் நான் நீண்ட பிரயாணம் செய்ய ஆசைப்படுகிறேன்.

இரண்டு நாட்களுக்குமுன், நான் பம்பாயிலிருந்து லக்ஷ்மணபுரிக்குச் செல்ல வேண்டி இருந்தது. பம்பாயில் ஐந்து நாட்கள் எனக்கு கடுமையான வேலை. அதிக சிரம பரிஹார காலமும், தூக்கத்துக்கு வசதியும் வேண்டியிருந்தது. ஆகையினால் அதிக வேகமாகப் போகாத ஒரு வண்டியில் ஏறிக்கொண்டேன். அது லக்ஷ்மணபுரி போவதற்கு 34 மணி நேரம் பிடிக்கும்—இரண்டு முழு இரவுகளும் அவற்றின் இடையில் ஒரு பகலும்—இந்த பிரயாண காலத்தில், பேட்டிகளும் இல்லாமல், வேறு வேலைகளுமில்லாமல் சுகமாக என்னிஷ்டப்படி தூங்கிக்கொண்டும் படித்துக்கொண்டும் போக நேர்ந்த சந்தர்ப்பம் எனக்கு மிகுந்த சந்தோஷத்தை யளித்தது. இந்த அரிய சந்தர்ப்பத்தை நன்கு உபயோகப்படுத்த, இரண்டாவது வகுப்பில் போவது என்று தீர்மானித்தேன்.

இரவு பத்தரை மணிக்கு, வண்டி விக்டோரியா டெர்மினஸ்ஸைத் தாண்டிச் செல்லும்போது, கொஞ்சம் தூக்கக் கண்ணுயிருந்தும், என் பழைய வழக்கப்படி, படிக்க புத்தகத்தை எடுத்தேன்.

அது தான் ஸ்டீபன் சுவேக்கின் "யாரோ ஒரு ஸ்திரீயின் கடிதம்" என்ற புத்தகம். மிகவும் வசீகரமான அழகிய நடையில் எழுதப்பட்டுள்ள அந்த ரஸமான கதை என்னை பாதிராத்திரி வரையில் முழித்துக்கொண்டிருக்கச் செய்தது. அதற்கப்புறம் ஒரேயடியாக பத்துமணி நேரம் தூக்கம். மறுநாள் நான் செய்ய வேண்டிய வேலை ஒன்றுமில்லை. அந்த சமயத்திலாவது, 'நாளைக்கு வேலை யிருக்கிறதே, சீக்கிரம் எழுந்திருக்கவேண்டுமே' என்ற கவலையில்லாமல், என் மனது நிம்மதியாயிருந்தது.

க்ஷவரம் செய்துகொண்டேன். உடைகளை அணிந்துகொண்டேன். ஒரு கட்டு புத்தகத்துடன் ஆனந்தமாக உட்கார்ந்தேன். முதன்முதல் டபள்யூ. பி. கார்ரியின் "தி கேஸ் பார் பெடரல் யூனியன்" என்ற புத்தகத்தில் இரண்டு மூன்று அத்தியாயங்கள் படித்தேன். புத்தகம் படிக்கப்படிக்க ஆனந்தமாயிருந்தது; அதோடு அந்தப் புத்தகத்தின் சாராம்சம் தற்காலத்தில் முக்கியத்வம் வகிக்கிறது. இருந்தாலும் வேறு ஒரு புத்தகம் வாசிக்கவேண்டும் என்று தோன்றிற்று. உடனே அந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டேன்; ஆனால் ஒன்று. இந்தியா, சைனா, ஸோவியத் யூனியன், இம்மூன்றையும் விலக்கிவிட்டு, ஒரு பெடரல் யூனியன் ஒன்று வேண்டும் என்று கோருகிற ஸட்ரெய்ட்ஸின் "இப்பொழுது யூனியன்" என்ற புத்தகத்தைக் காட்டிலும் அந்த புத்தகம், நல்லது என்று நான் எண்ணுகிறேன்.

பிறகு டி. என். ப்ரிட்ஸின் "மாஸ்கோவில் வெளிச்சம்" என்ற புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். ஒரு பாகம் கூட முன் படித்திருக்கிறேன்; இருப்பினும் மறுபடியும் மொத்தம் படிப்பது என்று நிச்சயித்தேன். இது படிப்பதில் பிரயோஜனம் உண்டு என்று தோன்றிற்று. வெகு சீக்கிரத்தில் விஷயங்கள் மறந்து போகின்றன. யுத்த நிகழ்ச்சிகளின் மத்தியில் இருக்கும் நாம், ஐரோப்பிய யுத்தத்துக்கு காரண பூதங்களாக நேர்ந்த சில சம்பவங்களை, மறக்கத் தகுந்த நிலைமையில் இருக்கிறோம். அந்நிகழ்ச்சிகள் பிரிட்டனின் கொள்கையையும், சேம்பர்லினின் கவர்ன்மெண்டையும் நன்றாக விளக்கிக் காட்டுகின்றன. இந்த கவர்ன்மெண்ட்தான் இப்பொழுது யுத்தத்தை நடத்திக்கொண் டிருக்கிறது. இந்த கவர்ன்மெண்டுடன்தான் இந்தியாவிலுள்ள நாம் பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டும். எனவே இந்த கவர்ன்மெண்ட்தான் கேவலம் கொடிய சர்க்கார் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த கவர்ன்மெண்ட்தான் இடைவிடாமல் பாஸிஸத்துக்கு ஆதரவு அளித்து, ஐரோப்பாவிலும் இன்னும் மற்ற தேசங்களிலுமுள்ள ஜனநாயகத்தை ஒழித்தது. பிரிட்டிஷ் ஜனங்கள் இந்த கவர்ன்மெண்டையே வைத்

துக்கொண்டு காரியத்தை ஸாதிக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதைக் கண்டுகொள்வதில் என்ன தப்பு? யுத்தம் ஆரம்பிக்குமுன்னும் ஆரம்பித்த பிறகும் இந்த சர்க்காரின் நோக்கம் ஏகாதிபத்தியத்தை பலப்படுத்துவது என்று சொல்லுவதில் தப்பென்ன இருக்கிறது?

அது போலவே இன்னொரு புத்தகம். "எச். ஜீ. வெல்ஸின்" வியாஸத் தொகுதி; அவருடைய எல்லாப் புத்தகங்களையும் போல் இந்தப் புத்தகமும் ரஸமாகத்தான் இருக்கிறது.

இன்னொரு புத்தகம் எடுத்தேன். ஜார்ஜ் புச்சினர்ரின் "டாண்டன்மரணம்" என்ற புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு. இருநூறு வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டது. அது பிரெஞ்சுப் புரட்சியை எனக்கு ஞாபக மூட்டிற்று. என் மனம் அந்தப் புரட்சிக்கும், இப்பொழுது ஏற்படப்போகும் பெரும் புரட்சிக்கும் இடையில் முன்னும் பின்னும் அலைந்தது. புச்சினரின் பதங்கள் என்னெதிரில் எழுந்து நின்றன. "இந்த புரட்சியின் சரித்திரத்தைப் படித்து வந்தேன். மனிதர்களின் குணங்களில் ஒரு இயற்கை ஒற்றுமை இருப்பதை நான் காண்கிறேன். மனித வியவஹாரங்களில் ஓர் அடக்கமுடியாத பலாத்காரமும் எல்லாராலும் கையாளப்பட்டும் கையாளப்படாமலும் வருகிறது என்பதும் தெரிகிறது. ஒரு பிரக்ருதி அலையின்மேல் தத்தளிக்கும் நுரை; மேன்மையடைவது கேவலம் அதிர்ஷ்டவசம் தான். அறிவைக் கரைகாணுவது, ஓர் பொம்மலாட்டம் ஆடுவதுபோல். இரும்புச் சட்டத்தை எதிர்த்து செய்யும் போர் உபயோகமற்றது. அதை (இரும்புச் சட்டத்தை) அறிந்து கொள்வது பெரும் வெற்றி. ஆனால் அதை ஆளுவது முடியாத காரியம். . . . ."

அப்படியா? நாம் ... யின்படி ஆடும் பொம்மைக... ணீரின்மேல் நிற்கும் நுரைகளா? ... னர் எழுதி நூறு வருஷங்கள் கழிந்திருக்கும். இந்த நூறு வருஷங்களில் மனிதர்கள் எவ்வளவோ கண்டுபிடித்தார்கள்; எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருக்கிறது மனிதன் அறிவு. ஆயினும் மனிதன் தன் துர்க்குணங்களை எதிர்த்து ஒழிக்கவில்லை. மனிதனை தனிமையிலும், கூட்டத்திலும் வெறி பிடிக்கும்படி செய்யும் துர்க்குணங்கள் இன்னும் ஒழியவில்லை. ஒரு துக்ககரமான சம்பவத்திலிருந்து இன்னொன்றுக்குச் செல்கிறோம். ஒவ்வொரு மனிதனுக்கும், துக்ககரமான முடிவு என்னவென்றால் டாண்டன் சொல்லுகிறபடி, அவன் சரித்திரத்தின் நிகழ்ச்சிகளால் பின்னால் தள்ளப்படுகிறான்; அவன் செய்யவேண்டிய வேலை ஒன்றும் இல்லை. அவன் விதியின் ஏஜண்டுமல்ல. ஆகையால் அவன் காலம் கடந்துவிட்டபடியால், அவனால் ஒன்றும் செய்யமுடியாது; தன் அதிருப்தியை வேண்டுமானால் தெரிவித்துக்கொள்வான்; துர்பலனாக ஆய்விடுகிறான். தனக்கு முடிவுகாலம் வரப்போகிறது என்பதை அவன் தெரிந்துகொள்ளுகிறான்.

பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து மறுபடியும் இருபதாம் நூற்றாண்டுக்கு வருகிறேன்; நேற்றுவரையில் நாம் அனுபவித்த இருபதாம் நூற்றாண்டு! இந்தியாவுக்கு வெற்றிமேல் வெற்றி அளித்த இருபதாம் நூற்றாண்டு! இப்பொழுது ஒரு அடி வைத்து இவற்றைத் தாண்டுகிறேன். தற்கால நிலைமையைப்பற்றிக் கூறும் பியரிவான் பாஸ்ஸனின் சுயசரிதையைப் படிக்க எடுத்தேன்.

அன்று முழுவதும் படிப்பு. அதற்குப் பிறகு தூக்கம். காலை லக்ஷ்மணபுரி யடைந்தேன். கொஞ்சகால விடுமுறை முடிந்துவிட்டது.

திண்ணையில்

[ராவ் சாகேப் கே. ஸுப்ரமண்யம், தஞ்சாவூர்]

"என்ன அப்படிச் சொன்னீர்கள்? காசு நியாயவழியில் கிடைப்பது துர்லபம், அக்கிரமத்தினாலே நிறைய கிடைக்கும் என்று சொல்கிறீர்கள்?"

"இந்த ஜகத்தில் மேலாக இருக்க வேண்டுமானால் காசு பணம் இல்லாமல் முடியாது. சந்நியாசி, ஆண்டி போல் திரியலாமென்றால் இது வேண்டியதில்லை. குடியா, குடித்தனமா யிருக்கிறவர்களுக்கு எப்படியாவது காசு சம்பாதித்துத்தான் ஆகவேண்டும். நியாயமான வழியில் கிடைத்தால் நல்லதுதான். ஆனால் உண்மையில் நல்வழி நடந்தால் இது கிடைக்காதென்று அனுபவத்தில் தெரிகிறது. உலகம் மோச மயம். தேச சரித்திரங்களைத்தான் பாரேன். ஆரியர்கள் எப்படி திராவிடர்கள் தேசத்தை ஆக்ரமித்துக்கொண்டனர்? மகாபாரத யுத்தம் தர்மயுத்தம் என்றுதான் பேர். அங்கும் ஸ்ரீ கிருஷ்ணன் கொஞ்சம் கிண்டல் பண்ணத்தான் வேண்டியிருந்தது. ஐரோப்பியர்கள், அமெரிக்கா, ஆசியா, இந்தியா முதலிய இடங்களில் எப்படிச் சேர்ந்தார்கள்? எப்படி இருக்கிறார்கள்? அந்தந்த தேசவாசிகள் எந்த ஸ்திதியிலிருக்கிறார்கள்? சாஸ்திரம் தர்மம் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்களெல்லாம் பரலோகத்தில் சுகமாயிருக்கலாம்; இவ்வுலகில் கஷ்டப்பட்டுத்தான் சாகிறார்கள்.

"இப்போ நம்ப ரூபாயிருக்கே, அதில் ஒரு ரூபாய்க்குள்ள வெள்ளி இருக்கா? அதிலுள்ள வெள்ளி 9½ அல்லது 10 அணாவுக்கு வாங்கலாமோனே? கடையிலே சாமான் வாங்குகிறோமே, கடன்காரன் நிஜம் சொன்னால் அவனுக்கு லாபமுண்டா? பொய்யோ, புளுகோ அடித்துத்தானே அவன் காசு சம்பாதிக்கிறான். ஹரிச்சந்திரனை விசுவாமித்திரர் ஒரு கடைக்காரனைச் செய்திருந்தால் அவர் சபதம் எளிதில் பலித்திருக்கும். இப்போதுதான் பாரேன். தருமத்தையும் நியாயத்தையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் ஐரோப்பாவில் என்ன செய்கிறார்கள்? பலவான் எளியவனை வாட்டுகிறான். ஒவ்வொன்றையும் கவனித்துப் பார்த்தால் படுமோசமாயுள்ளது. லாபமில்லாமல்போனால் இவைகள் இவ்வளவு வலுத்துப்போகுமா? இதைக் கவனித்துத்தான் அந்த முதலாளி தன் புத்திரருக்கு அப்படிப் பிழைக்கும் புத்தி சொன்னார். அதில் என்ன தப்பு? பிரபஞ்சத்திலேயே, வெளிக்கு ஒரு வேஷம், அசலில் புரட்டுத்தான். சாஸ்திரமெல்லாம் வெளிக்குத்தான், பிறருக்குப் போதிக்கத்தான். 'அஹிம்ஸா பரமோ தர்ம:' மனோவாக்கு, காயம் எதினாலும் யாருக்கும் தீங்கிழைக்கப்படாது என்று நாம் வெகுகாலமாய் நடந்து வந்ததால் நாம் கீழே விழுந்தோம். ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லியபடி நம்முடைய கடமைகளை செய்து வந்திருந்தால் இந்நிலைக்கு வந்திருக்கமாட்டோம். இதெல்லாம் போகட்டும். நம் ஊர்க்காரர்களெல்லாம் ஊர் சங்கதியைப்பற்றி கவனித்தார்களா? கூட்டுறவு சங்கம் ஏதாவது ஏற்பாடாச்சா?"

"ஏது தாதா. ஒருத்தனும் காதில் போட்டுக்கவில்லை. எனக்கு நம்பிக்கை

யில்லே. நீங்க முன்னமேயே சொன்னீர்களே, அதுமாதிரிதான். சில பையன்கள் அப்பா, மாமாக்களுக்குத் தெரியாமல் ஸர்குலரில் கையெழுத்து போட்டார்கள். இதுகளை நம்பினுல் முடியுமா? ஊர் ஒன்றும் சரிவராது. வேறெ வழியிருக்கா?"

"சரி, சரி, இப்படி ஆகும்னு எனக்குத் தெரியும். எப்போது சர்க்கார் ரயத்வாரி கிராமம் என்று செய்து, ஒவ்வொரு ரயத்துக்கும் நேராக தனித்தனியாக கிஸ்தி கொடுக்கவும், நியாயத்துக்குக் கோர்ட்டுகளுக்குப்போகவும் ஏற்பாடு செய்தார்களோ, அப்போதே கிராம ஒற்றுமை கெட்டது. ஒவ்வொருவனும் அகம்பாவம் மேற்கொண்டான். நல்லதோ, கெட்டதோ, ஒருவன் சொல்வதை இன்னொருவன் கேட்பதில்லே. தரித்திரமும் சேர்ந்தது. அதன் பலனுக மதம், மாத்சரியம், பொறுமை எல்லாம் ஏற்பட்டது. கிராம சமுதாயமே கலேந்து விட்டது. இப்போது பஞ்சாயத்து போர்டு, கோர்ட் எல்லாம் வந்தது. ஆனுல் பழைய களங்கமும் அழுக்காறுமுள்ள மனம் மாறவில்லே. கொஞ்சத்தில் மாறவும் செய்யாது. நீடித்துக்கொண்டேயிருக்கும். சர்க்கார் இன்னென்று செய்திருந்தால் பிரயோசனமாயிருக்குமோ என்னமோ? அதாவது சர்க்காருக்கு முக்கியமா கிஸ்தி பணம்தானே வேண்டும்? ஒவ்வொரு ஊரிலும் உண்மையான யோக்கியர்களேத் தேர்ந்தெடுத்து, பஞ்சாயத்துகளே ஏற்படுத்தி அவைகளுக்குப் பூர்ண அதிகாரம் கொடுக்க வேண்டும். இந்த கிராமத்திற்கு இவ்வளவு நஞ்சை, இவ்வளவு புஞ்சை, இது இது பாசனம் என்றெல்லாம் ஏற்படுத்தி அந்தந்த ஊரிலிருந்து வரவேண்டிய மொத்த வரியை சேர்ந்தார்ப்போல் வாங்கிக்கொள்ளணும். கிராமக் காரியங்களே அவைகளே செய்து கொள்ளலாம். காலி நிலங்களே சாகுபடிக்குக் கொண்டு வரலாம். இப்படியெல்லாம் நடக்குமானுல், கிராமப் பொது மக்களுக்குள் ஒற்றுமை வளரும். இதெல்லாம் நாம் இங்கே பேசிக்கொண்டிருந்தால் நடக்கப் போகிறதா? ஏதோ நடக்கிறது நாடகம். விட்டு... கார் இன்னென்றும் செய்ய... தொழில் ஜாதியார்க்கு ஸெட்டில்மெ... ஏற்படுத்தி அவர்களுக்கு தொழில், விவசாயம் முதலியதை ஏற்பாடு செய்திருக்கிறுர்களே. அதுமாதிரி வேலேயில்லாமல் தவிப்பவர்க்கும், பிச்சைக்கார லட்சங்களுக்கும் ஏற்படுத்தினுல் எப்படியிருக்கும்? கடுமையான கட்டு திட்டங்கள் இல்லாமல் போனுல் அடங்கமாட்டான்கள் நம் அதிகப் பிரசங்கிகள். எத்தனையோ காடுகள், காலி இடங்கள் சர்க்கார் வசத்தில் உண்டு. முதலில் செலவெல்லாம் சர்க்கார்தான் செய்யவேண்டும். பிற்பாடு கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்து கொள்ளலாம். அந்தந்த கிராம மானேஜர் சிரத்தையுடன் பாடுபட வேண்டும். வெறும் 'கூலிக்கழுவதா' யிருந்தால் போதாது. அதோடு புது காலனியின் ஜனன கால ஜாதகம் எப்படியோ? அதைப் பொறுத்து அதிகாரிகளும் நல்ல சாமர்த்தியசாலிகளாயிருப்பார்கள். இதற்குப் பதிலாக இப்பொழுதுள்ள பள்ளிக்கூடங்களே ஒருவாறு திருத்தியமைக்கலாம். பள்ளிக் குழந்தைகளுக்கு தாய் தந்தையருடைய செல்லம் உதவாது. அங்கங்கே ஆச்ரமங்களோ, ரெஸிடென்ஷியல் ஸ்கூல்களோ ஏற்படுத்த வேண்டும். சர்க்கார் உதவி செய்ய வேண்டும். ஆனுல் உள் விவகாரத்தில் தலேயிட்டுத் தகராறு செய்யக் கூடாது. முடிந்தால் சர்க்கார் உதவியை நாடாமலிருப்பதே நல்லது. விசாலமான இடமிருந்தால் போதும். நல்ல ஆறுகள், காடுகள் இவைகளுக்கருகில் இருப்பது நலம். அநேகமாய் ஏழை, அனுதைப் பையன்களேச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு கிராமத்துக் குடியானவனுக்குத் தேவையான கல்வியையே போதிக்க வேண்டும். புதிய முறைகளினுல் அதிகப் பலன் பெறும் வழிகளேயும், லாபம் பெறும் வழியில் விற்பனே செய்யவும் கற்றுக் கொடுக்கவேண்டும்.

"இப்படிக் கற்கும் காலத்திலேயே அந்தந்த பள்ளிக்கூடம் தன் செலவைத்

அசடு வந்து எங்கேவேண்டும். ஆரம்பத் கிறது. இவயிருந்தாலும், பிற்பாடு நம் யாணைமேல் நாம் நிற்க முடியும்; பிறர் கையை எதிர்பார்க்க வேண்டாம். சாதாரணமாக இப் பள்ளிக்கூடம் 100 ஏகர் நிலமத்தியில் ஏற்பட்டால் சுமார் 10 அல்லது 15 ஏகருக்கு மாடுகளுக்குப் புல் தோட்டமாக வைக்கலாம். நல்ல மாடுகள் வளர்த்தால், பால், தயிர், நெய்க்கு ஆச்சு. கன்றுகள் வளர்ந்தால் நல்ல விலைக்குப் போகும். எருவுக்கும் ஆச்சு இதன் உள் விஷயங்களெல்லாம் சிறுவருக்கு நல்ல பாடமாகும். இன்னும் ஒரு 10 ஏகரில் காய், கரி, கிழங்குகள் சொந்த உபயோகத்திற்கு மிஞ்சியதை மார்க்கெட்டுக்கனுப்பலாம். வேறு 4, 5 ஏகராவில் புஷ்பச் செடிகள் பயிரிடலாம் அங்கங்கே பழ விருக்ஷங்கள் பயிரிடலாம் பாக்கியில் பாதி நிலம் புஞ்சை. அனேக தானியங்கள் பயிரிடலாம்; பருத்தி, ஆமணக்கு, எள்ளு, கொள்ளு, கோதுமை, ஓமம், மல்லி, சோளம், கம்பு, கேழ்வரகு, கடலை, துவரை எல்லாம். கொஞ்ச நிலத்தில் உணவுக்கு வேண்டிய நெல் விதைக்கலாம். பாக்கியில் பள்ளிக்கூடம், தொழிற்சாலை, ஹாஸ்டல், விளையாட்டு மைதானம் இவை. பையன்களோடு வேலை செய்ய கொஞ்சம் ஆட்களும் தேவை. ஆனால் கொஞ்ச காலத்திற்குத் தான். விவசாயத் தொழிலே பையன்களுக்கு அனுபவ ஞானம் தரும். திடகாத்திரமும், தன்னம்பிக்கையும் அதிகமாகும். கூட்டுறவு முறை வாழ்க்கையில் ருசி காண இடமாகும்."

(516-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தியிலிருந்து மறைமுகமான லாபம் பெறலாம். ரசாயனத் தொழிற்சாலைகள் பெருகியுள்ளன. இன்னும் பல புதிய தொழில்களும் நிறுவப்படலாம்.

அங்கங்கே கூறியுள்ள மாற்று வழிகளைத் தவிர, யுத்தத்தையடுத்து வரும் பொருளாதார மந்தத்தை சமாளிக்கப் பல முறைகள் கையாளவேண்டும். வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பல வழிகளை நாமும் உபயோகிக்கவேண்டும். பெருஞ் சாலைகளபிவிருத்தி ஒரு முக்கியமான அம்சமாகும். அதேபோல் பெருவாரியான கட்டட வேலைத் திட்டமும் வேண்டும். மேல் நாடுகளில் மந்தத்தைச் சமாளிக்கும் திட்டமாகிய 'பொதுஜன முன்னேற்றச் செலவு' நம் நாட்டில் நாகரீக வாழ்க்கைக்கே இன்றியமையாததாகும். ஒரு சில இடங்களில் மட்டுமின்றிப் பரந்த பாமர மக்களுக்குதவும் பெரிய திட்டங்கள் கையாளப்படவேண்டும். இதையெல்லாம் செய்யும் ஒரு பொதுஜன சர்க்காரின்கீழ், யுத்தத்தையடுத்துத் தொழில் சுருக்கமோ, பொருளாதார மந்தமோ தலைகாட்டாது. யுத்தகால முடிவிற்குள் விடுதலையடைந்து சுயாட்சி நடத்தும் வருங்கால இந்தியாவில் இவ்வித முன்னேற்றத் திட்டங்கள் கைக்கொள்ளப்படுமென்று நம்புவோமாக.

மாதிரி

[ஆர். பங்கஜம், ஸ்ரீரங்கம்]

நான் சில கதைகள் படித்தேன். அதில் படும் கஷ்டம் எல்லாம் படுவது பெண். பிறகு சந்தோஷமா யிருந்தா...அல்லது இன்பமா இருக்கா...இல்லாவிட்டால் ஒற்றுமையாகி மணந்தார்கள்:..இவ்விதம் முடிவது கதை.

கஷ்டப்படும்போது வம்பளந்தவர்கள் பிறகு என்ன சொல்ரா? பெண்தான் கஷ்டப்பட்டாளா? கணவன்?...பிறகு அவர்கள் வாழ்வு எவ்விதம் சென்றது? ஒரே ஒற்றுமையாகவா!...எற்றத் தாழ் வேயில்லையா? இப்படியான சில சந்தேகம் எனக்கு வந்துவிடும். அது தீருவதே இல்லை. அதற்காகவே நான் ஒரு கதை எழுத உத்தேசித்தேன், முன்னும் பின்னும் நடப்பதை அறிவித்து...

எங்க மாமா சிறுவயதில் தத்தாரியாகத் திரிந்தாராம், எப்படித்தெரியுமா? பனிரண்டு ரூபாய் சம்பளம். ரயில்வே, எலக்ட்ரிக் கம்பி பொருத்தும் வேலை. "அதில் பொடி, புகையிலை, திருட்டுத்தனமாக சுருட்டு ..இந்த சம்பளத்துலே... தேவடியாள் வீட்டுக்கு வேறே போய் வந்துடரான்" என்று அம்மா சொல்ரச்சே எனக்கு சிரிப்பு சிரிப்பாய் வரும்.

இப்படியெல்லாம் இருக்கானே, ஒரு கால்கட்டாவது கட்டிவிடணும் என்று பெங்களூர் அம்புலுபெண்ணைக் கலியாணம் செய்துவைத்தாள். அவளுக்கு வயசு பதினறு. மாமாவின் வயசு இருபத்திஐந்து.

மாமாவுக்கு ஆம்படையாள் கிட்டே நடந்துகொள்ளும் விதம் தெரியாது; அவளுக்குக் குடித்தனப் பாங்கு தெரியாது; இவ்வித தம்பதிகள் இவர்கள்.

குழம்பில் ஒரே திதிப்புத்தான் இருக்கும்...உப்பு, உரப்பு இராது. இல்லாவிட்டால் ரசத்தில் தேங்காயும் கொத்தமல்லியுமாக மிதக்கும். இதுவெல்லாம் இவருக்குப் பிடிக்காது. என்னமோ பழகப் பழகச் சரியாய்விடும் என நினைக்கும் பொறுமைப் புத்தியும் இவரிடம் இல்லை.

எதை எடுத்தாலும் (அவளும் சண்டிதான். ரகசியமாகச் சொல்ரேன், அவளிடம் எனக்கு நல்லபேர்.) எல்லாம் தப்புத்தப்பாக செய்துவைப்பாள். ஒரு குத்து ஓங்கிக்குத்துவார். ரத்தம் வராது. மண்டையைத் தடவிக்கொண்டு அவள் வெளியில் போய்விடுவாள். "பாரேன் தைரியத்தை" என்று கர்ஜிப்பார் இவர்.

இடையில் இவ்விதமான வைபவங்களுடன் ஐந்து வருஷங்கள் ஓடி மறைந்தன. கொடுமையான ஒரு குடும்பத்தில் நான் வாழ்க்கைப்பட்டு குடித்தனத்திலீடுபட்டு இரண்டொரு வருஷமாகிறது. இப்பொ மாமாவுக்கு இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம். எலக்ட்ரிக் இன்ஸ்பெக்டர், இவர்.

என் அம்மாவிடம் அவருக்கு ரொம்பப் ப்ரீதி. தன்னை எல்லோரும் பரிகசிக்கும்போது அம்பா கவலைப்பட்டு, கலியாணமும் செய்துவைத்து, வேண்டும் வேண்டாததற்கு சமயத்தில் உதவி செய்த அக்கா...அதனுல் அவள் சார்பாக அந்த வாஞ்சை என்னிடம் வழிந்தது.

என்னை அழைத்துப் போகவேண்டுமென்ருர்...எத்தினையோ 'மறுப்பு'களுக் கிடையில் அந்த விடாகண்டர் மாமா என்னை விழிப்புறத்திற்குஅழைத்துச் சென்ருர்.

கோவில்தெருவில் குடியிருந்தோம். பின்பக்கம் அதிக விஸ்தீரணமுள்ள தோப்புத்தான். அத்தெருவில் ஒண்டியாய்ப் போகக்கூடப் பயமாக இருக்கும்.

ஒருதினம் மாமி தலைவலி என்ருள். உடனே சுரமும் கூடவந்தது. படுத்துக் கொண்டாள். எனக்கென்னவோ அவள்

செய்வதெல்லாம் மாய்மாலம் என்றுதான் தோன்றியது. என்ன முக்கல் முனகல். மாமாவைக் கண்டால்தான் அதிகம். (முதல் விஷயத்தை மறந்துவிட்டேனே! முன்பின் எழுதியிருந்தால்தானே தெரியப்போகிறது? என் சிறுவயதில், அவள் குடித்தனத்தில் ஈடுபட்ட பொழுது நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லிவிடுகிறேன்.)

மூன்றுநாள் லீவு வந்தது அவளுக்கு. மாமா சமையல். நானும் என் அண்ணனும் சிறுவர்கள் ஆனதால் அவர் சமையல்வேலை துவக்கவேண்டியதாயிற்று...... சம்பளம் இருபத்தைந்து தானே. ஹோட்டல் சாப்பாடு கட்டிவராது......மாமியைப் “பொடி டப்பா எங்கே” என்று கேட்டார். அவருக்கு அவசரம், அவள் உட்கார்ந்து விட்டாளே இதுவேறு கோபம். அது அவளாய்ச் செய்துகொள்வதா? என்னவோ முட்டாள்தனம். அவர் கேட்டது அவள் காதில் படவில்லையோ என்னவோ, பதில் இல்லை. “நான் கேட்கிறேன், இவள் இடிபோல் நிக்கறாள்” என்று ‘ஊம்,’ என உறுமி ஓடி அவளை ஒரு குத்துவிட்டார். அப்பா, நானும் அண்ணனும் அலண்டுவிட்டோம். குடத்து நீரை அண்ணன் ஊற்றினான் ஸ்னானம் செய்தார். திரும்பவும் ஆரம்பித்தார் சமையல் வேலையை...ஒருவிதமாக முடிந்தது. அவளுக்கும் சாதம் வைத்தார், அவள் தின்கவில்லை. ஏன் தின்பாள், அடிபட்ட வேதனை அவளுக்கு. தின்கிறாயா, இல்லையா?......மாட்டேன், வேண்டாம், இந்தச் சோறு எனக்கு. “அய்யோ! விபரீதமே” எனத் திகைத்தோம் நாங்கள்.

“என்னடி சொல்றே: நானும் பாக்கறேன் எதிர்த்து வேறே பேசறயா?” என விசையாய்க் கிணற்றடிக்குச் சென்று ஒரு குடம் தண்ணீர் இறைத்துவைத்துவிட்டு ஓடினார் அவளிடம்; அவளைத் தொட்டால் ஸ்னானம் செய்யவேண்டுமே, அதற்காக இறைத்துவைத்தார். கூந்தல் குதிகால்வரை அவளை பிடித்து இழுத்தார் பேய்போல் “தலை...ஒழி”...என ஆசை தீர, இல்லை, கை வலிக்கும் வரை, அடித்துவிட்டு, “தண்ணியைக் கொட்டு” தலையில் என்றார். அண்ணனுக்குக் கை நடுக்கம். அவர் தலையில் குடத்தையே போட்டுவிட்டான். அவனை என்ன செய்வார் பாவம்! செல்லக்குழந்தைகள் நாங்கள்.

கொல்லைப்புறம் ஓடிவிட்டாள் அம்மாமி. இப்போ இவர் மனம் அடித்துக்கொள்ளுகிறது. “எங்கேயாவது கிணற்றில் விழுந்து வைக்கப்போகிறாளே! போய்ப்பாரு இக்கா” என்றார். நான் சிரித்துக்கொண்டே “நீ போய்ப்போய் அடித்துவிட்டுவா, அவன் தண்ணியும் குடத்தையும் தலையிலே போடட்டும். நான் அவளைத் தேடிண்டு போறேன்......என்ன மாமா, உனக்கு அப்படிக் கோபம் வரது” என் அண்ணனுக்குப் பயம், என்னைக் கிள்ளினான் பின்னாலிருந்து. நான் கண் சிமிட்டிவிட்டு மாமியைப் போய்ப் பார்த்தேன். அவள் கோடியில் புல் தரையில் படுத்திருந்தாள். கிட்டப் போனேன் பேசவில்லை அவள். மாமீ...எனக் கூவினேன்...என்னம்மா...என அணைத்துக் கொண்டாள்.

“மாமி...நான் மாமாவை அலற வைக்கிறேன் பார்” எனச் சொல்லி உள்ளே வந்தேன் மாமாவிடம்.

“மாமி உள்ளே வரப் போவதில்லையாம். அவளைக் காணோம்...கொல்லு கொல்லுண்ணு கொல்லு...அவ என்ன பண்ணுவ?”

“இக்ரா நீ சமத்தோன்னோ. மாமியைப் பாத்துக்கோ” என அழாக் குறையாகச் சொன்னார். ஆமாம் நீ அடிப்பதும் அடிச்சுவிட்டு அவளைப் பாத்துக்க நான் ஆளா?...நாங்கள் ஊருக்குப் போறோம். எங்களைக் கொண்டுபோய் விட்டுடு...

“என் கண்ணே, அக்கா கிட்டே சொல்லாதே...மாமி கிட்டப்போ...எனக்கு ரயிலுக்கு நாழியாச்சு...” மூஞ்சியைப் பாக்கணுமே அப்போ! உள்ளுக்குள் மாமாவுக்கு பயம்தான். மத்தியானமே வந்துவிட்டார். பொறுமையற்று அடிப்பானேன்? பின் மறுபடி மனம் பதைப்பானேன்?

இனிமேல் சமாசாரத்தைச் சொல்லு கிறேன். ஐந்து வருஷத்துக்கப்புறம் மாமா அழைத்துப் போனுரா? மாமிக்கு சுரம் வந்ததா? அன்று மாமா லயனில் போனபிறகு...

"இந்ரா நீதாண்டி எனக்கு ஒத்தவ. ஒன்னேடே எவ்வளவு சொல்லனும்க ரது எனக்கு. அதிர்ஷ்டத்தின் ஆதி யிடம் பொறுமையின் புகலிடம்நீ...சின் னப் பெண் ஆனுலும் விவேகிடி நீ" என முகஸ்துதியுடன் கலந்த பீடிகையுடன் சொன்னுள்.

"பாரு இந்ரா ஒங்க மாமா என்ன கணக்குக் கேக்கரா எதுக்கெடுத்தாலும், நீங்க வந்தா ஆத்துலெ ஒரு சள்ளை கிடை யாது. அடுத்தாப்போலெ ஒங்க பெரி யம்மா வந்தா வீடு ஒரே ரணகளம்தான். ஏன் சொல்ரேன்னு நினைச்சுக்காதே, அப் படி ஆாது. ஏன் வரான்னு நினைக்கத் தான் தோணரது. ஏன் இஷ்டமா? அவா அவா ஆத்துக்கு அவா வா வரா கெட்டிக் காரி என நினைத்தேன் மனதில். மாமாக்கு அடகுன்னு வாங்கினேனே இந்தச் செயினைப் பாரு. அந்த இரண்டு பட்டுப் புடவையும் அம்மா வாங்கித் தந்தான்னு சொன்னேன். அம்மா, அரிசி, வெல் லம், தேங்காய் அனுப்பரா. வெறுமெ அவகிட்டே வாங்கிண்டா நன்னருக்குமா அதுக்காக முப்பது ரூபா அனுப்பி விட ரேன். குட்டித் தங்கை வந்திருந்தா. அவளைக் கண்டா மாமாக்குப் பிடிக்கரதே இல்லை. என்னமோ குழந்தைதானே அவளுக்கு இருபது ரூபாய் தந்தேன். இதெல்லாம் மாமாக்குத் தெரியாது. தொலையாது இரண்டு பேருக்கும் இரு பது இருந்தா ஒடா ஒட்டம். ஆனு நான் எல்லாம் செலவாயிடரதுன்னு சொல்லி விடரது. பின்னே என்ன சேரது. இப்போ மாமா ஒனக்கு ஒரு பொடவை போறுங்கரார். நான் இரண்டு புடவை வாங்கி வச்சிருக்கேன்."

இதைமட்டும் நான் காதில் போட்டுக் கொள்ளவில்லை. என் விஷயமல்லவா? ஆமாம் மாமி, அக்கா, தங்கைன்னு இது கூடச் செய்யமாட்டாளா? நன்னுத்தான் சேயணும். ஏதோ கை நிறையச் சம்பா திக்கிருர் மாமா; இல்லாதவா சேரது கஷ்டம். நீ சேயத்தான் வேணும். (என் வீட்டு முதலா போகிறது. நன்னுத்தான் செய்யவேண்டும் என்னும் தாளத்திற்கு ஒரு நல்ல பேரெடுக்கலாமே, செலவில் லாமல்!)

தினம் தினம் ஓடிவந்தா நிக்ரா?... வந்தா போனு...த்தானே!"

"நீ சொல்ரே விவேகி. ஒங்க பெரியம்மா என்ன துர்த்தைப் படரா தெரியுமோ? அம்மாடி! இவர் கட்டிச் சுருட்டிண்டு போரது தேவலையாக்கும்...ஒரு தரம் அவா வந்தா காஞ்சாரிப்படரா..."

கேலியாக நான் "இதோ நானும்தானே வந்திருக்கேன்...நானும் அப்படித்தான். அதுக்கென்ன உனக்கு என்மேலே பிரி யம். அதனுலே நான் சொல்ரது எல்லாம் உனக்கு ஹிதமாய் இருக்கு. இல்லாட்டா நான் மட்டும் என்ன ஒசத்தி, இரண்டு கொம்போடே வந்திருக்கேனு என்ன?" என்றேன்.

"அது என்ன அப்படிச் சொல்ரே... (கேலியாக) அதுவும்தான் உன்னுல் தானே உன் மாமாவின் 'சள்ளை' ஒழிந் தது. அதுக்காகவாவது உன்னிடம் எனக்கு அன்பு இருக்காதா? இருந்தா லும் என் பெண்போல் நீ..."

எதற்கும் ஊம் போட்டு அவள் இஷ் டப்படியே நடந்தால் பெண்ணுக்கு மேல் ஒன்று சொல்லிக்க இருந்தால் அதுவாகக் கூட ஆகலாம். இதற்குத்தான் கொஞ் சம் பொறுமை வேண்டும். அதுவும் எல் லோருக்கும் கிடைக்கும் பாக்யமா? பக வான் சித்தம்தான். மாமா இருந்தால் அரை டம்ளர் கஞ்சிதான். அவர் வரித்து கட்டிக்கொண்டு ஆரஞ்சு ரஸம் பரிந்து பரிந்து கொடுப்பார். அப்போ அவளுக் குப் பிடிக்கவே பிடிக்காது. அப்படி வரும் வார்த்தியும். அவர் வெளியில் சென்றுவிட் டால் நான் புளியஞ் சாதமும், இட்டலி யும் செய்து கொடுப்பேன். நன்னு மொக் குவாள். பிறகு எப்படிப் பசிக்கும்? ஆனுல், நன்ருய் மாயமாலம் செய்து

(529-ம் பக்கம் பார்க்க)

மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டி

[ஜி. பாலசுப்ரமண்யம், மாயவரம்]

அத்தியாயம் 12

அன்று மத்தியானம் கோவிந்தய்யரைப் பார்க்க அவருக்கு வெகு நாட்களாய்த் தெரிந்த ஓர் ஜோசியப் பிராமணர் வந்தார். அவரைக்கூட சாப்பிடச்சொல்லி, சாப்பாடு ஆனபிறகு கோவிந்தய்யர் ராமுடுவின் ருது சாந்தி முகூர்த்தத்திற்கு ஓர் நல்லநாள் பார்க்கும்படி ஜோசியரிடம் சொன்னார். அவரும் அப்படியே ஓர் முகூர்த்தநாளைத் தெரிவிக்க, அது பத்து தினங்களுக்குள் இருந்ததனால், தன் சம்சாரத்தைக் கூப்பிட்டு, கலியாண காரியங்கள் எல்லாம் அந்த முகூர்த்த தினத்துக்குள் ஆய்விடுமாவென்று கேட்டார். அந்த அம்மாளும் அதற்கு ஒன்றும் ஆக்ஷேபிக்கவில்லை. "வீட்டில் எந்த சாமான் இல்லை, இரண்டே நாளில் எல்லா ஏற்பாடும் செய்துவிடலாம்" என்று சொன்னாள். அதைக் கேட்டதும் கோவிந்தய்யர் இராமலிங்கய்யருக்கு ஓர் முகூர்த்தப் பத்திரிகை எழுதித் தன் குமாரனிடமே கொடுத்து அவரிடம் சேர்ப்பிக்கச் சொன்னார். அவன் வெட்கப்பட்டவனாய், வேறு யாரிடமாவது கொடுத்தனுப்பலாமென்று சொல்ல, கோவிந்தய்யர், தன் காரியஸ்தரையும், இந்த ஜோசியரையும் அனுப்பித் தன் சம்மந்தியிடம் விஷயத்தைச் சொல்லி கடிதத்தையும் கொடுக்கச் சொன்னார்.

அவ்விருவரும் கும்பகோணம் சென்று, இராமலிங்கய்யரைப் பார்த்து, விஷயத்தைச் சொல்லி கோவிந்தய்யர் அனுப்பிய கடிதத்தையும் அவரிடம் கொடுத்தார்கள்.

இராமலிங்கய்யருக்கு இது பார்த்ததும் வெகு சந்தோஷமுண்டாகி, உள்ளே போய் தன் சம்சாரத்திடம் விஷயத்தைத் தெரிவித்து, தன் சம்மந்தியினால் அனுப்பப்பட்ட இருவர்களுக்கும் சிற்றுண்டி செய்வித்து தாம்பூலமும் அளித்தார். அவர்களும் சற்று நேரத்திற்கெல்லாம் விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

இராமலிங்கய்யர் பெண் கங்கம்மாள், தனக்குப் புக்ககத்திற்குப் போகவேண்டிய தினம் நெருங்கிவிட்டது என்று தெரிந்து மிகவும் ஆவலுள்ளவளாய்த் தான் இன்னென்ன சாமான்கள் சேகரம்செய்து அங்கு எடுத்துக்கொண்டு போவது என்று ஒவ்வொன்றாய் யோசனை செய்துகொண்டிருந்தாள்.

அவள் மாமன் மாமிகளின் ஆசாரங்களையும் ஈசுவர பக்தியையும் தான் அங்கு போனபோதெல்லாம் கவனித்திருந்ததால், அவளுக்கு, அவர்களை திருப்தி செய்யவேண்டுமென்ற ஆவல் அதிகமாயிருந்தது. தன் வீட்டுத் தோட்டத்தில் இருந்த அபூர்வமான புஷ்பச் செடிகளைத் தன் புக்ககத்திற்குக் கொண்டுபோவதற்காகத் தனி புஷ்பச் சட்டிகள் தயார்செய்து, அப்புஷ்பச் செடிகளை அதில் வளர்ச்செய்தாள். ஈசுவர ஸ்தோத்ர பாடல்கள் பலவற்றை மனப்பாடம் செய்து வந்தாள்.

இராமலிங்கய்யரும் தன் பெண்ணைக் கடைக்கு அழைத்துப்போய் அவளிஷ்டப்படி வேண்டியவைகளை வாங்கிக்கொடுத்தார். ராமுடுவையும் கலந்துகொண்டு அவனுக்கு ஏது பிரியமோ அம்மாதிரி வஸ்திரங்களையும் இதர சாமான்களையும் வாங்கிவந்தார்.

குறிப்பிட்ட தினத்தில் கோட்டையூரில் கோவிந்தய்யர் கிருகத்தில் வெகு விமர்சையாய் கங்கம்மாவுக்கு ருதுசாந்திக் கலியாணம் நடைபெற்றது.

இராமலிங்கய்யர் தன் பெண்ணை இங்கேயே விட்டுவிட்டுப் போகும்படி யிருந்ததால், மிகவும் வருத்தமடைந்தார். கோவிந்தய்யர் அவருக்குப் பின்வருமாறு சமாதானம் சொன்னார்.

“எனக்கும் ஏகபுத்திரன்; உமக்கும் ஏக புத்திரி; நம்மிருவருக்கும் இவர்களுடைய க்ஷேமத்தைத் தவிர இகத்தில் ஆகவேண்டியதொன்றும் இல்லை. நான் குழந்தை கங்கம்மாளை அழைத்துக்கொண்டு அடிக்கடி கும்பகோணம் வருகிறேன். தாங்களும் கொஞ்சம் கொஞ்சமாய் வேலைகளைக் குறைத்துக் கொண்டு இங்கு அடிக்கடி வரலாம். நாம், குழந்தைகள் சந்தோஷமாயும் க்ஷேமமாயும் இருப்பதைப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்போம். தங்களுக்கு ஏன் கவலையுண்டாகவேணும். சௌ. கங்கம்மாள் மிகவும் புத்திசாலி. அவளுடைய நடத்தையால்

நமக்கு மேன்மேலும் விவேகம் உண்டாகுமென்று நான் நம்புகிறேன்."

சம்மந்தி கோவிந்தய்யர் சொன்னதை இராமலிங்க அய்யர் திருப்தியுடன் கேட்டுக்கொண்டு மனதை சமாதானம் செய்து கொண்டு தன் பெண் கங்கம்மாளை புக்ககத்திலேயே விட்டுவிட்டுப்போக மனமில்லாதவராயிருந்தாலும் சம்மந்திக்கு மனஸ்தாபமில்லாமலிருக்கும்பொருட்டு அவர் சொன்னபடி செய்யத் தீர்மானித்தார். வீட்டில் கலியாணம் முடிந்து வந்திருந்தவர்க எல்லோரும் கோவிந்தய்யரிடம் விடை பெற்றுக்கொண்டு ஒவ்வொருவராய் ஊருக்குப் போனார்கள். இராமலிங்கய்யரும் தன் பெண் கங்கம்மாளிடம் சென்று அவளுக்கு நல்ல புத்திமதிகள் சொல்லி அவளிடம் விடை பெற்றுக்கொண்டார். கோவிந்தய்யர் சம்மந்தி ஊருக்கு போவதற்குமுன் அவருக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து அவருக்கு சமாதானம் சொல்லி யனுப்பினர்.

சௌ. கங்கம்மாள் புக்ககத்தில் வந்த தினம் முதற்கொண்டு குடித்தன பாரத்தை நிர்வகிக்க வேண்டிய கடமை தன்னைச் சேர்ந்ததென்று உணர்ந்து தன் மாமியைத் தாயார் ஸ்தானத்தில் வைத்துக்கொண்டு வீட்டுக் காரியங்கள் எல்லாவற்றையும் கவனிக்க ஆரம்பித்தாள். தன் மாமனுருக்கும் மாமியாருக்கும் இவளிடம் நாளுக்கு நாள் அன்பும் ஆதரவும் அதிகமாய்க் கொண்டே இருந்தது. கங்கம்மாள் தன் புருஷனிடத்திலும் அவன் மனம் கோணமல் நடந்துவந்தாள். நமது சாஸ்திரத்தில் சொல்லியபடி தன் நாதனே தனக்கு தெய்வம் என்பதைக் கைக்கொண்டு அவனிடத்தில் பயபக்தியாயும், அன்பாயும் அவனுக்கு வேண்டிய சிசுருஷைகளை தவக்கமன்னியிலும் சரியாயும் செய்து வந்தாள். அவ்வீட்டிலுள்ள எல்லோருக்கும் கங்கம்மாள் தன்னுடைய குணத்தாலும் நடவடிக்கைகளிலும், ஓர் திலகம்போல் வழங்கினள்.

இராமலிங்கய்யர் கும்பகோணத்தில் ஓர் பிரபலமான வக்கீலாயிருந்த போதிலும், அவர் தற்காலத்திலுள்ள நாகரீகத்தில் ஈடுபடாமல் பழயகால சம்பிரதாயப்படி ஏற்பட்டுள்ள வைதீக கர்மாக்களை சிரத்தையாய்ச் செய்துகொண்டும், தம் பெண் கங்கம்மாளுக்கும் ஈசுவர பக்தியுண்டாகும் படியான காரியங்களைச் செய்யும்படி பழக்கி வந்ததால் அவள் புக்ககம் வந்தது முதல் தன் மாமன் மாமி இவர்களின் வைதீக சிரத்தையை கவனித்து அவர்களுக்கு ஹிதமான காரியங்களை செய்து அவர்களை திருப்தி பண்ணுவது சுலபமாயிருந்தது. ஆனால் நவீன நாகரீகத்திலும் கங்கம்மாள் ஒன்றும் பின் வாங்கவில்லை. நவீன நாகரீகம் என்றால், அனுசாரமாயும், ஆகாரத்திலும், உடைகளிலும் மற்றுமுள்ள நடவடிக்கைகளிலும் நம் குடும்பத்தில் புருதனமாய் ஏற்பட்டுள்ள முறைகளுக்கு விரோதமான முறைகளைக் கைக்கொள்ளுதல் அல்ல. படிப்பில் ஆங்கில பாஷை கற்றுக்கொண்டும், தேசீய விஷயங்கள் நன்றாய்த் தெரிந்து கொண்டும், தேச சேவையில் ஈடுபட்டு தேச முன்னேற்றத்துக்காக பாடு படும்படியாயிருப்பதற்கு வேண்டிய யோக்கியதைகளையும் கங்கம்மாள் சம்பாதித்துக் கொண்டிருந்தாள்.

அவள் ஸ்கூல் பைனல் (School Final) பரீக்ஷை தேறினவள். ஹிந்தி பாஷை நன்றாய்த் தெரியும். கைராட்டினத்தை வைத்துக்கொண்டு நன்றாய் நூல் நூற்கத்தெரியும். தினசரிப் பேபர்களை விடாமல் படித்துக்கொண்டு அப்போதைக் கப்போது நடக்கும் விஷயங்களைத் தெரிந்து கொண்டிருந்தாள். தன் புருஷனிடம் பேசுவதானல் அன்று தினசரிப் பேபர்களிலுள்ள விஷயங்களைப் பற்றிப் பேசி அவைகள் சம்மந்தமாக அவர்களுக்குள்ள அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொள்வார்கள். தன் மாமியிடத்தில் மத்தியானம் சாப்பாடு ஆனபிறகு நமது புராணங்கள் சம்மந்தமாயுள்ள கதைகளை வாசித்தும், சொல்லியும், அவள் மனதை திருப்தி செய்வாள். சாயந்திர வேளையில் வீட்டிலுள்ள பூஜை மண்டபத்தில் நின்றுகொண்டு பலவிதமான சுலோகங்கள், தமிழ் பாடல்கள், கீர்த்தனங்கள் முதலியவைகளை காதுக்கு மிகவும் இனிமையாய் பாடிக்கொண்டு தன் மாமனுருக்கும் திருப்தியடையச் செய்வாள். அவள் கொட்டையூர் வந்து இரண்டு மூன்று மாதங்களுக்குள், அவள் செய்கைகளால், எல்லோரும் அவளைப் புகழ்ந்து பேச ஆரம்பித்து விட்டார்கள். ஊருக்கே அவள் ஒரு திலகம் போலிருந்தாள்.

அத்தியாயம் 13

கும்பகோணத்தில் கம்பெனி வியாபாரம் நாளுக்கு நாள் முன்னேற்ற மடைந்து கொண்டு வந்தது. தினசரிப் பேபர்களில் இக்கம்பெனியின் முறைகளைப்பிரசுரம் செய்ய ஆரம்பித்தது முதல் பல ஊர்களிலிருந்து வியாபார சம்மந்தமாய்க் கடிதங்கள் வர ஆரம்

பித்து முக்கியமாயுள்ள தானியங்களின் மார்க்கெட் (Market) நிலவரங்களுக்கு இக்கம்பெனியே ஓர் தக்க உரிமையான இடமாக ஆய்விட்டது. ஆனால் மாணிக்கம் செட்டியார் தனக்கு அனுபோகமில்லாத வியாபாரங்களைச் செய்ய இக்கம்பெனியில் இடம் கொடுக்கவில்லை. நெல், அரிசி, எள்ளு, தேங்காய் முக்கியமான மளிகை சாமான்கள் இவைகள் தான் இக்கம்பெனியில் வியாபாரம் செய்யப்பட்டன. மொத்தமாய் வாங்கி சில்லரை வியாபாரிகளுக்குக் கொடுப்பதைத் தவிர, இவர்கள் சில்லரை வியாபாரம் செய்வதில்லை. மாணிக்கம் செட்டியாருக்கு தன் ஊரிலுள்ள அபிமானமானது வரவர அதிகமாய், தன் ஊர் வரவர க்ஷீணதசையடைய ஆரம்பிக்கிறதைப் பார்த்து வருத்தமடைந்து, அதை மீண்டும் ஓர் சுபீக்ஷமான கிராமமாகச் செய்ய என்ன உபாயம் செய்யலாமென்று யோசித்த வண்ணமாயிருந்தார். அவருக்கு ஓர் யோசனை தோன்றிற்று. தான் கொட்டையூரிலிருந்து வியாபாரம் செய்யும்போதே மற்ற சரக்கைவிட எள்ளு இவர் அதிகமாய் வியாபாரம் செய்துவந்தார். இவர் செக்குகள் வைத்து எண்ணெய் ஆடி எண்ணெய் வியாபாரம் செய்தால், அதனால் தன் ஊரிலுள்ளவர்கள் அனேகம் பேருக்குத் தொழில் ஏற்படுத்தலாமென்று இவருக்குத் தோன்றிற்று. இதை இராமலிங்கய்யரிடம் கலந்தார். அவர் அதற்குச் சம்மதித்து, அது மிகவும் உசிதமானது என்று சொன்னதோடும் கூட, மெஷீன் வாங்கி வைப்பது பிசகான காரியம். புராதனமாயுள்ள செக்குகள் வைத்துக்கொண்டு தான் வேலைசெய்ய வேண்டுமென்று சொன்னார். செட்டியாருக்கு இது பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று. உடனே கொட்டையூரில் செக்குகள் தயார்செய்து அதற்கு வேண்டிய மாடுகளும் வாங்கி நல்லெண்ணெய் தயார் செய்து கம்பெனியில் விற்க ஆரம்பித்தார். கும்பகோணத்தில் இக்கம்பெனி வியாபாரம் செய்யும் நல்லெண்ணெய்க்கு பிரசித்தி யுண்டாகிவிட்டது. இந்த வியாபாரம் நாளடைவில் மிகவும் அதிகரித்ததினால் செட்டியார் செக்குகள் இன்னும் அதிகமாய் தயார் செய்துவிடும்படியாயிற்று. இது சம்மந்தமாய் அங்கிருந்தவர்களில் இருநூறு பேர்களுக்குமேல் வேலை ஏற்பட்டது. இவர்களில் வேலையை மேன்பார்வை பார்க்க பத்து ஆசாமிகளுக்கு மேல் மேஸ்திரிகள் நியமனம் செய்யப்பட்டார்கள்.

இதே சமயத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே மிகவும் அதிகரித்து, அதை நிவர்த்திக்க என்ன வழிகள் என்று ஆலோசனைசெய்ய ஊர் ஊராய் மீட்டிங்குகள் கூடிப் பலவிதமான தீர்மானங்கள் கொண்டுவரப் பெற்றன. மகாத்மா காந்தி கைராட்டினத்தின் மகிமையைப்பற்றி தீவிரமாய் பிரசாரம் செய்து வேலையில்லாமையை ஒருவாறு ஒழிக்கக் கைராட்டினம் மிகவும் அனுகூலமாயுள்ளது என்று பத்திரிகை மூலமாயும் பிரசங்கங்கள் மூலமாயும் ஜனங்களுக்கு எடுத்துரைத்தார்.

தவிர தேக ஆரோக்கியத்துக்கு மெஷினில் தயாரிக்கும் அரிசியைவிட கைக்குத்தல் அரிசியானது மிகவும் நல்லது என்று பிரசாரம் செய்தார். இது சம்பந்தமாய் பல பேர்பெற்ற டாக்டர்கள் மகாத்மா காந்தி சொல்வது மிகவும் சரி என்று சொல்ல ஆரம்பித்தார்கள். வக்கீல் இராமலிங்கய்யர் இதைக் கும்பகோணத்திலிருந்த ஜனங்களுக்கு பிரசாரம் செய்ததுமன்றியில் மாணிக்கம் செட்டியாரிடம் கைக்குத்தல் அரிசி தயார்செய்து ஊரிலுள்ள ஜனங்களுக்கு விற்பனை செய்யும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் செட்டியார், இதில் நிச்சயமாய் இவ்வளவு மூட்டை வாங்குகிறோம் என்று ஜனங்கள் ஒப்புக்கொள்ளாத வரையில் இந்த வியாபாரம் லாபகரமாயிராது என்று சொல்லிவிட்டார். ஆனால் இராமலிங்கய்யர் இதை விட்டுவிடவில்லை. ஊரில் இதைப்பற்றி பிரசாரம்செய்து டாக்டர்களைக் கொண்டு மீட்டிங்குகளில் பேசும்படி சொல்லி, வெகு ஜனங்களைக் கைக்குத்தல் அரிசி வாங்கும்படி செய்தார். இந்தக் கம்பெனியில் தயாரிக்கும் அரிசியே வாங்குகிறது என்று தீர்மானித்துக்கொண்டு கம்பெனிக்கும் அரிசி மூட்டைகளுக்கு ஆர்டர் செய்துவிட்டார்கள்.

மாணிக்கம் செட்டியார் இதில் மிகவும் திருப்தியடைந்து தன்னூரில் கைக்குத்தல் அரிசி தயார்செய்ய ஏற்பாடுகள் செய்து அரிசி சப்ளைசெய்ய ஆரம்பித்துவிட்டார். இந்த வியாபாரமும் வெகு மும்முரமாய் நடந்தேறியது. இதனால் கொட்டையூரில் இருநூறு பேர்களுக்குமேல் வேலை அகப்பட்டு அவர்கள் காலக்ஷேபத்திற்கு சௌகரியமாய் இருந்தது. பகற்காலங்களில் ஒரு ஆரவாரமும் இல்லாமலும், அனேகம் வீடுகள் பாழாயும் இடிந்து போனதாயுமிருந்த கொட்டையூரில் இப்போது எல்லா வீடுகளிலும் ஜனங்களும் ஊரில் உத்சாகத்துடன் வேலை செய்ததால் ஓர் சுருசுருப்பும் உண்டாகி ஊர் லக்ஷ்மி

களையுடனிருந்தது. மாணிக்கம் செட்டியாருக்கு இதைப் பார்க்க மிகவும் உத்சாகமுண்டாயிற்று. பண்ணை கோவிந்தய்யருக்கும் இது மிக்க சந்தோஷத்தை உண்டுபண்ணிற்று. ஊர் இன்னும் சுபீக்ஷமடைவதானல் வேலையாட்களின் குடிப் பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்று கோவிந்தய்யர் எண்ணினர். இதற்கு அவர் ஒரு உபாயம் செய்தார். எல்லா வேலையாட்களையும் ஒவ்வொரு தினமும் வேலை முடிந்தபிறகு கடவுளை வணங்கும்படி தூண்டினர். கடவுளை வணங்குவதற்குமுன் காவிரியில் மூழ்கிவிட்டு தேகத்தை சுத்தம் செய்துகொண்டு வணங்கவேண்டுவதுதான் முறை என்று அவர்களுக்குச் சொன்னர். ஒவ்வொருதினமும் சாயந்திரம் வேலை முடிந்தபிறகு வேலையாட்களை அந்த மேஸ்திரிகள் மூலமாய் காவிரிக்கு அழைத்து வரும்படி சொல்லி அவர்களை முழுகச்செய்து காவிரிக் கரையிலுள்ள மண்டபத்தில் அவர்களை யெல்லோரையும் உட்காரவைத்து ஈசுவர பஜனை செய்து இரவு ஆனவுடன் அவர்களை வீட்டிற்கு நேரிடப் போகும்படி செய்தார். இம்மாதிரிச் செய்ததானது அவ்வூரில் குடிப் பழக்கம் அறவே ஒழிந்து போய்விட்டது. ஜனங்களுக்கு சுசிருசியும், நல்லொழுக்கமும், கடவுள் பக்தியும் உண்டாயிற்று. கோவிந்தய்யர் இந்த ஏழை ஜனங்களின் முன்னேற்றத்துக்காக தன் காலம் முழுவதும் அற்பணம் செய்துவிட்டார். கொட்டையூரானது எல்லாவிதத்திலும் மெச்சத்தகுந்ததா யிருந்தது. வெளியூர் ஜனங்களும் இதைப் பார்க்க வர ஆரம்பித்தார்கள்.

(525-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் படுத்திய பாட்டிற்கு எல்லாமாக வட்டியாக வாங்குகிருளே... அந்த சாமர்த்தியத்தைத்தான் சொல்லுங்களேன். அது தெரியுமா எல்லோர்க்கும்? இல்லை. அவளுக்கேற்ற மருமாள்தான் என்னைப்போல் கிடைக்குமா? ஒரு போதுமில்லை. நிச்சயமாக.

இப்போ முன் சொன்ன வம்பர்கள்— "அப்போ அவன் என்ன படுத்தினனே? இப்போ இவ அதுக்கு இரண்டு பங்கா அவனை வதைக்கிரு"—என்கிருர்கள்.

"அன்னிக்கி அடிபட்டது மறந்து போச்சு. அவராங்கியைப் பாரேன்"—என்கிருர்கள்.

இப்படியாக முன்னும் பின்னும் உள்ள கதைதான் எனக்கு ரொம்ப ஸ்வாரஸ்யமாகப் படுகிறது...உங்களுக்கு எப்படி?



தீபாவளிக் கச்சேரி

[அம்புலு]

சிங்கராஜா மனைவியுடன் அந்தப்புரத்தில் ஏகாந்தமாக இருந்தது. ராணி அன்று ரொம்பக் கோபத்துடனிருந்தது. சிங்கம் வருத்தத்துடன் "கண்ணே ஏன் கோபத்துடனிருக்கிறாய்?" என்று கேட்டது.

ராணி முகத்தைச் சுளித்துக் கொண்டு "போதும் போதும். குழந்தைக்குக் கல்யாணந்தான் ஒசத்தியாகப் பண்ணவில்லை. தீபாவளியையாவது விமரிசையாகக் கொண்டாட வேண்டாமா? மாப்பிள்ளைக்கு இன்னும் கடிதம் போடவில்லையே. பெண்ணைப் பெற்றுவிட்டு இத்தனை முருக்குடனிருந்தால் எப்படி?" என்றது.

ராஜா சிரித்துவிட்டு "அட அசடே. மாப்பிள்ளைக்குக் கடிதம் போட்டு எட்டு நாட்களாயிற்றே. புடவை வேஷ்டியெல்லாங் கூட வாங்கியாகி விட்டதே" என்றார்.

இதைக்கேட்ட பெண் சிங்கம் ஆச்சர்யத்துடன் "அப்படியா! நீங்கள் கெட்டிக்காரர். தீபாவளியன்று எல்லோரையும் கூப்பிட்டு விருந்துச் சாப்பாடு போடவேண்டும். ஒரு நல்ல பாட்டுக்கச்சேரி ஏற்பாடு செய்யவேண்டும்" என்றது.

சிங்கராஜா "அப்படியே ஆகட்டும்" என்றார். தீபாவளியன்று சிங்க மாப்பிள்ளை வந்து சேர்ந்தார். அவரது கண்கள் தனது அருமைக் காதலியைத் தேடின. தீபாவளி ஸ்நானம் ஆயிற்று. மாப்பிள்ளை கதர் வேஷ்டிகளைக் கட்டிக்கொண்டு ஜம்மென்று உட்கார்ந்திருந்தார். சிங்க ராஜகுமாரி சில்க் கதர் புடவையைக்கட்டிக்கொண்டு குலுக்கி மினுக்கியவாறு பக்ஷணங்கள் நிறைந்த தட்டை நீட்டினாள். ராஜாவும் ராணியும் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சாப்பாடெல்லாம் முடிந்ததும் கச்சேரிக்கு ஏற்பாடாயிற்று.

மாப்பிள்ளையும் பெண்ணும் நன்றாக அலங்கரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். குயில்பாட்டு, வண்டு சுருதி போட, கரடி மிருதங்கம், அதற்குப் பிறகு மயில் பரதநாட்டியக் கச்சேரி.

குயில் ஜம்பமாக வந்து உட்கார்ந்தது. ஆனால் அதனால் பாட முடியவில்லை. தொண்டை கட்டியிருந்தது. சிங்கம் டாக்டர் நரியைக் கூப்பிட்டு தொண்டைக்கு மருந்து போடச்சொல்லிற்று. வண்டின் சுருதிப்பெட்டி சரியாக இல்

லாமலிருந்தது. அந்த நாய் ரிப்பேர் செய்து கொடுத்தது.

கச்சேரி ஆரம்பமாயிற்று வண்டு அழகாக சுருதிபோட குயில் குயிலினுமினிய குரலால் "வனராஜசுதா" என்ற கீர்த்தனையை வெகு அழகாகப் பாடிற்று. எல்லா மிருகங்களும் கரகோஷம் செய்தன. கச்சேரி முடிந்தது.

மயிலின் பரதநாட்டியக் கச்சேரி ஆரம்பமாயிற்று. பூனை பிடிலைச் சுருதிகூட்டிற்று. அணில் ஜாலரை வைத்துக்கொண்டு தயாராக இருந்தது. நரி மிருதங்கத்தைச் சரி பார்த்துக்கொண்டது.

மயில் புன்முறுவல் பூத்த வதனத்துடன் மாப்பிள்ளையைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே தோகையை விரித்துக் கொண்டு ஆடத் தொடங்கும் போது "ககூ. ககூ. ககூ" என்று பெரிதாகக் கத்திக்கொண்டு சபையில் பிரவேசித்தது ஒரு கழுதை. சகுனம் எப்படி?



"கவி காள மேகத்"தில் ஒரு காக்ஷி

திரை உலகம்

(எஸ். எஸ்.)

வாஹினி பிக்சர்ஸாரின், ஸுமங்கலி (தெலுங்கு) அதிதுரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கிற தென்றும் கூடிய விரைவில் சினிமா வானில் உதயமாகி காட்சியளிக்கக் கூடுமென்றும் தெரியவருகிறது. இவர்களுடைய முந்திய படங்களைவிட பலவிதங்களில் முன்னேற்ற மடைந்திருக்கிறதென்றும் நம்பப்படுகிறது.

* * *

பவானி பிக்சர்ஸார் தங்களுடைய படமாகிய சண்டிகாவை (தெலுங்கு) அநேகமாகப் பூர்த்திசெய்து விட்டார்க ளென்றும், இம்மாதக் கடைசிலோ, அல்லது அடுத்த மாத முதலிலோ வெள்ளித்திரையில் தோற்றுவிக்கக் கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

வரப் போகிறது, வரப் போகிறது என்று கர்பத்திலிருந்த குழந்தை போலிருந்தது ராஜகோபால் டாக்கீஸாரின் கிருஷ்ணன் தூது. எல்லாம் செவ்வனே நடந்தேறி சென்ற 7-ந்தேதி முதல் தென்னிந்தியாவில் ஏக காலத்தில் பத்து பிரதான நகரங்களில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பக்தர்களுக்குக் காட்சி யளித்துக் கொண்டிருக்கிறாரெனவும் தெரிய வருகிறது.

* * *

கவிகாள மேகத்தினுடைய படப்பிடிப் பெல்லாம் செவ்வனே நடைபெற்றுக் கத்தரி வேலையும் ஒழுங்காகப் பூர்த்தியாகிக் கூடியவிரைவில் காட்சிக்குத் தயார் என விளம்பரப் படுத்தப்பட்டு வருகிறது. மதுரை ஸ்ரீ தேண்டபாணி பிலிம்ஸார்கள், இப்படம் முதல் தரமாய் அமைய வேண்டும் என்று, காசைக் காசாய்ப் பாராமல் அள்ளி வீசி இருக்கிறார்களாம். அகில இந்திய நாதசுர வித்வான், திருவாடுதுரை ராஜரத்னம் சங்கீதத்தை அள்ளிச் சொரிகிறாராம். S. P. L தனலட்மியும் முந்திய படங்களைவிட இப்படத்தில் அபரிமிதமாய் நடித்திருக்கிறாராம்.

* * *

ஊர்வசி சாஹஸம் எனப் புதுப்பெயர் புனைந்து மருவிய கிராத-அர்ஜுன படத்திற்கு, இன்னும் சிறிது நகைச்சுவையை, ஊட்டவேண்டும் என நினைத்து, P. B. ரெங்காச்சாரி, ஜாலி கிட்டு, ஆகியோர்களுடைய கூட்டுறவைக்கொண்டு புதியதாய் நிர்மாணிக்கப்பட்ட பிரவின் ஸ்டுடியோவில் வீனஸ் பிக்சர்ஸாரால் தயாரிக்கப்பட்டு வருகிறதாம் இன்னும் சில காட்சிகள்.

* * *

நாடக ராணி K. B. சுந்தராம்பாள் நடிக்கும் மணிமேகலை என்னும் காப்பியத்தின் சிருஷ்டி கர்த்தாக்களான அஸன் தாஸ் கிளாஸிகல் டாக்கீஸாரிடமிருந்து, அப்படத்தின் பூரண வினியோக உரிமைகளையும் பெற்றுவிட்டதாக அறிவிக்கின்றார்கள், T. K. புரொடக்ஷன்ஸார்கள். கிஷன்சந்த் செல்லராமின் முதலாளியானவரே, மேற்படி சினிமா கம்பெனியின் முதலாளி எனத்தெரிய வருகிறது. எனவே இத்துரையில் போதிய அனுபவம் இல்லாவிடினும் கூட, தேர்ந்த ஆசாமிகளைக்கொண்டு திறம்பட நடத்துவார்கள் எனக்கருதப் படுகிறது.

* * *

டைரெக்டர் ராஜா சாண்டோ ஜானகி பிக்சர்ஸ் என்ற புதுக்கம்பெனி ஒன்றை நிறுவி, சூடாமணி என்ற தெலுங்குப் படத்தில் முனைந்திருக்கிறாராம். அதில், C. S. R. ஆஞ்சனேயலு, புல்லிபாடி வெங்கடேஸ்வர ராவ், J. S. கோக்கோ, ஜோக்கர் ராமுடு, வந்தேமாதரம் புகழ் கல்யாணி, இவர்கள் நடிக்கிறார்கள்.